KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 3] 1930 ஞு ஆகஸ்டு மீ 21உ [No. 33.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader). 641
2. அப்பர் (யானையேற்றமும் குதிரையேற்றமும்) E.N. தணிகாசலமுதலியார் B.A., B.L. 643
3. மாதவி மாதவம்—(கண்ணகி கண்டகனு) பொ. இராமானுஜன் 645
4. நம்மாழ்வார் வைபவம் (1ம் பத்து—10ம் தசகம்) K. இராஜகோபாலாசாரியார் B.A. B.L. 647
5. மானத சாத்திரம் (நடத்தை) T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B.L. 649
6. தமிழ்ப்பாடம் (நைடதம்—நளன் தூதுப் படலம்) 651
7 குறுந்தொகை (பாட்டு 124—130) K. இராமரத்நம் ஐயர் B. A. 653
8. கம்பராமாயணம் (மந்தரை சூழ்ச்சிப் படலம்) T. N. சேஷாசலம் B. A., B. L. 655
9. வர்த்தமானம் 659

கலாநிலயம்

8-SEP 1930 18917

"மானமழிந்தபின்........."

சட்டசபைகளால் யாதும் யாவரும் எவ்வகைப்பயனும் எய்துதலென்பது இயலாததொன்றுவதை இதன்முன் பன்முறை இவ்விதழ்களில் வற்புறுத்தியிருக்கின்றோம். அதன் அமைப்பு, அங்கத்தினரைத் தேர்ந்தெடுக்கும் முறை, அதற்களித்த அதிகாரம் முதலியவைகளில் குறையுளவென்ற காரணத்தால் நம்நாட்டுத் தற்காலச் சட்டசபைகளைப் 'பகிஷ்காரம்' செய்யவேண்டுகின்றவர் 'இவைகளாற் பயனில்லை' என்று சொல்வதன் பொருளிற்கும் எம்முடைய கருத்திற்கும் யாதும் சம்பந்தமில்லை. அமைப்புமுறை அதிகாரம் அனையவைகளின் தன்மை எதுவேயாயினும், இப்பொழுது அவை இன்னவின்னபடி இருக்க வேண்டுமென்று வேண்டுவார் வேண்டுகின்ற வேட்கைக்கெல்லாம் அதிகமாயவொரு அதிகாரத்தையும் பிரதிநிதித்துவத்தையும் அளிக்கத்தான் நேர்ந்தாலும், அதனாலும் ஜனங்கள் எள்ளளவும் பயன் எத்திறத்திலுங் காணப்போவதில்லை என்பது இக் கலாநிலயத்தின் கருத்தாதலை இதுகாறும் உரைத்திருப்பவைகளால் வாசகர்கள் உணர்ந்திருப்பார்களாதலால், இக்கால இத்தேய இவ்வர்த்தமானங்களைக் குறித்தே சட்டசபைகளின் பயனின்மையை நாம் வற்புறுத்துகின்றோமென எவருங் கொள்ளமாட்டார்களென்று நம்புகின்றோம்.

இனி, சட்டசபைகளுக்குள் புகுவதினால் சிற்சிலர்க்குப்பல்வேறுவகைகளில் வருவாய்க்குவழியாகின்றதை நோக்கி அதுவே பொதுஜனங்களின் பெரும்பயன் எனத் தோன்றுகின்ற மயக்கத்தினின்று தெளிவடையச் சிந்தனை சிறிதே வேண்டுமாதலின் அதுவொரு பொருளென நாமிங்கு உள்நுழைந்தொன்றும் உரைக்கவேண்டிய அவசியமில்லை. இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் அவையனைய பிறதேயங்களிலும் அமைத்துள்ள 'சட்டசபைப் பொறுப்பாட்சி' என்னும் அம்முறையினால் பொதுஜனங்கள் பெற்றபயன் யாதென்று எண்ணுகின்றார்களோ அறியேம்.

பயனிலாவிப் பெருங்கோலத்தை பலபடப் பரிந்து வேண்டிப் பாராட்டுகின்றவர்களை எண்ணுங்கால் இருதிறப்படுகின்றது எமதுள்ளம். பயனொன்றுமில்லாத அச் சட்டசபையைச் சூழ்ந்த தொழில்களையும் மொழிகளையும் எற்றுக்கு நாம் இங்குச் சிந்தித்தல் வேண்டும் என்பதொன்று. இவ்வுலகத்தில் புரியப் பெறுகின்ற பயனிலாச் செய்கைகள் பலவற்றோடு இதனையும் ஒதுக்கிவிட்டு ஆவன வேறுவகைகளில் நினைவினைச் செலுத்தலே நேரிதென்ற வெண்ணம் பலகால் எழுகின்றது. எனினும், இச் சட்டசபைகள் உதவியற்ற வெறுமையோடு நில்லாமல் பற்பலவகைகளில் மானுடர்தம் இயற்கையாய வளர்ச்சியின் உயர்வினுக்கு அளவிறந்த இடையூறுகள் பல இழைக்கவல்ல தன்மையும் வாய்ந்திருக்கின்றன வென்னுமோரையத்தால், கருத்துடன் விடயங்களை ஆராயவல்ல அனைவரும் கலங்கலாவது வியப்பன்று. இதன்படி நோக்குங்கால் சென்ற ஈரிதழ்களில் யாம் சிறிது சிறிது குறித்தவண்ணம், நாணநிலையினை நசிக்கச் செய்வதென்னும் ஓரே கணக்கினில் சட்டசபையின் அமைப்பு தேர்தல் முதலியவைகளால் நிகழும் அத்

தனைத் தீமையையும் பெரும்பாலும் அடக்கிக் கொள்ளலா மெனக் கருதுகின்றோம். மனத்தால் நினைத்து மானுடப்பெருமையைக் காக்கின்ற அத்திப்பிய தூண்டுதலை மானமென்றும், மனத்தின் தொழிலின்றியே அந்நிலைக்கு விரோதமாய வழியினின்று விலகவைக்கும் ஓர் உள்ளத்தினியற்கையாய இயக்கத்தை நாணமென்றும் வகுத்துரைக்கலாம். இவ்வகையில் மானத்திற்கு நாணம் முதல்துணையும் பக்கபலமும் ஆவது அறியப்படும். எனின் நாணமில்வழி மானமும் அழிவது பெரும்பாலும் இன்றியமையாத தாகின்றது. பின்னர் 'மான மழிந்தபின் வாழாமை முன்னினிதே' என்ற அப்பொய்யில் திருவாக்கிற்கு இலக்காகிச்சட்டசபைத்தேர்தலின்கண் முன்னின்றோர் தற்கொலைக்கே வழிதேட வேண்டியவர்களாகின்றனர் எனவுரைத்தால் மிகையாமோ! ஆதலின் இச் சட்டசபை சம்பந்தமான கருமங்கள் எல்லாம் நாணத்தையும் மானத்தையும் புடைத்துண்ணும் பகுவாய் உடையவை என்பதை ஓரளவு உணர்ந்துவிட்டால் பிறகு யாம் உரைத்தவைகளே உறுதியென்பது எளிதிற் புலப்படுவது அருமையாகாது.

தங்களுக்குப் பிரதிநிதி யாகத்தக்கோன், கல்வியாலும் குணத்தாலும் அறிவினுலும் இவனேயன்றி வேறு இல்லை என்று ஜனங்கள் அவன்பால் வந்து, 'பெரும! எங்களுக் கேற்றன புரிந்து காத்தி' என வேண்டுவதும் இவன், இரப்போர்க்கொன்று இல்லையெனலாகாதென்னும் தூய்மையால் அச் சட்டசபைக்கு ஏகுவதே தன் கடனெனும் தன்மையில் ஒவ்வ வேண்டியதும் முறையாதல்போக இவனே, 'என்னிற் சிறந்தோன் யாருளன். எனது ஆற்றலுக்கோ அளவில்லை. நும்பால் யான் வைத்த அருளிற்கோ கரையில்லை. உங்கள்பொருட்டு யான் கொண்டுள பரிவு பெரிது பெரிது கண்டீர்; உங்கள் கையிலுள்ள 'வோட்டை' என்னுடைய பெயரிற்கெதிரே எறியுங்கள்' என்றென்று தன்னுடைய மேம்பாட்டைத்தானே பலபடப் புகழ்ந்துகொள்ளுகின்ற பரிபவத்தை யாரிடத் துரைசெய் தாறுவோம். இவன் சொல்வதில் எள்ளளவு மெய்யிருப்பின் அது எம்மனோர் செய்த பாக்கியம். சிறிது நாட்களுக்குமுன் இந்நாட்டுக் கட்சிகளொன்றிற்குத் தலைவராயிருப்பவர் ஒருவர், வருகின்ற சட்டசபைத் தேர்தலுக்கு அபேக்ஷகராகவும் நிற்பவர், கூறியமொழி சில இங்குக் குறிக்கொள்ளத்தக்கது. வட்டமேசைக்கூட்டம் முதலிய முயற்சிகளால் இந்தியாவிற்கு வரப்போகும் ஆட்சிமுறையமைப்பினில் தாழ்த்தப்பட்டவர் என அழைக்கப்படும் அத்தொகுதியினர்க்கு எக்கதி கிடைக்கும் என ஆராய்வாராகிய அவர் சிறிதும் கூசாது பின்வருமாறு பேசுகின்றார்:—

"தாழ்த்தப்பட்ட வகுப்பைச்சேர்ந்த நண்பர்களே! ஆங்கிலேயர் கையினின்று அதிகாரம் அகன்று எங்கள் கையில் சேருமாயின் உங்கள்நிலைமை இப்பொழுதிருப்பதனினும் குறைந்துவிடுமோ என்று அஞ்சுவது இயற்கையேயாயினும், உங்களுக்கொன்றும் குறைவேற்படாதென்று நான் நிச்சயமாய்ச் சொல்கின்றேன். அரசியல் வாதங்களில் நான் மிகவும் அனுபவமுடையவன். அதுவும் என்னுடைய கட்சியின் நோக்கமெல்லாம் போகும்வழி நான் நன்கறிவேன். ஆதலின் இப்பொழுது நான்கூறவருமிதனை நம்புங்கள். எல்லாக் கட்சியினரும் தீண்டப்படாதார்அனைய தாழ்ந்தஜாதியினரிடத்தில் தலைசிறந்த அன்புள்ளவர்போல் நடிப்பதெல்லாம் பொய். அவர்களுடைய முன்னேற்றத்திற்குப் பாடுபட்டுப் பல சட்டங்களை நிறுவிவைப்பது அவர்பால் சுரந்தொரு உண்மையான இரக்கம் எதனாலு மன்று. இவ்வகையில் அந்தப் பெரும் பகுதியினருடைய ஆதரவை யபகரித்துத் தங்களையும் தங்கள் கட்சியையும் பலப்படுத்திக்கொள்வதே இத்தகைய இயக்கங்களின் சூழ்ச்சியாகும். ஆதலால் புதிய அரசியல் அமைப்பின் திருத்தங்களால் சட்டசபைகளின் அதிகாரம் எங்கள் கையில் அதிகமாகவதிகமாக அவ்வக் கட்சியினருக்கு உங்களுடைய ஆதரவும்அதிகமாகவேண்டியிருக்கு மென்பதை மறவாதீர். எனின் சட்டசபைகளில் அதிகாரத்தில் இருக்கும் கட்சியினரும், அவர்களை எதிர்க்கும்மறுகட்சியினரும், இவ்வதிகாரத்திற்கு அவாவிக் காலம்பார்த்திருக்கும் பிறகட்சியினரும், ஒருவரோடொருவர் இகலி உங்கள்முன்னேற்றத்தை விரைவு படுத்துபவராவாரென்பது திண்ணம். இரண்டொருவர்மட்டும் ஆங்காங்குத் தனித்தனித் தங்கள்சுயநலம் யாதும்தேடாது உங்களுடையநன்மைக்கே பாடுபட்டவர்களாயிருந்திருக்கலாம். ஆனால் அரசியல்வாதத்திலும், கட்சியின் பேரிலும் உங்களைப் போற்றுவதெல்லாம் உங்கள்பொருட்டன்று என்பது நிச்சயமாதலால் எங்கள்பொருட்டே உங்களுக்கு நன்மை அதிகமும் செய்யுங்காலம் அருகிலே நிற்கின்றதென்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்."

இந்த வாக்கியங்களுக்கு எம்முடைய விரிவுரை முற்றிலும் மிகை. இவ்வகையில் நடிப்பதெல்லாம் அரசியல்தர்மமே என்றவோர் ஆழ்ந்தநம்பிக்கையாலன்றோ அவர் ஒளியாது இதனை அரசியல்தந்திரத்தின் சூழ்ச்சித்திறனிற்கோ ருதாரணமாய் உரைக்கத்துணிந்தனர். உரைப்பவர்மனமும் அதனை யவர்வாய்பார்த்து நிற்கின்ற ஜனங்களின் மனமும், கபடநாடகங்க ளாடுவதற்கு நாணமென்பதில்லாத நிலையினை யெய்துதற்குப் பயின்றுவருமேல், பின் மானமுடைய வாழ்க்கையில் மக்கள்தாம் நிலைத்திருக்க லாவ தெங்ஙனம்.

இன்னுமொன்றுளது. ஓட்டிற்குக் கைநீட்டி இவர் தம்மைப்பற்றியும் மற்றவர்களைப் பற்றியும் உரைப்பதவ்வளவும் உண்மையே யாகித்தான் இருந்தாலும், ஒவ்வொரு வீடாய் ஏறி எனக்கு 'இவ்வோட்டை'த்தா என்று இரவினில் பயில்கின்றநாவும் மனமும் நாணநிலையினின்று மெல்ல மெல்லத் தம்மை விலக்கியே கொள்கின்றன. "எனக்காக நானொன்றும் கேட்கவில்லையே. மற்றவர் நன்மைக்காகத்தானே கேட்கின்றேன். அதுவும் காசா பணமா, ஓட்டுக்குறி கேட்டால் அது ஏற்கின்ற இகழ்ச்சிக்குள் என்னை ஆக்குமோ" எனச்சிலர் கருதலாம். பிறருடையநன்மைக்காக இவ்வபேக்ஷகர்கள் ஓட்டிற்கு எவ்வளவு மன்றாடுகின்றார்க ளன்பது உலகறிந்தவோர் இரகசியம். மற்றினிஉண்மைக்கருத்துஅதுவேயானாலும் "ஆவிற்கு நீரென்றிரப்பினும் நாவிற்குஇரவின் இளிவந்தது இல்" என விளம்பிய பொய்யாமொழியைப்போக்கிலேபோகவிட்டுப் பின் பெரிதுத்தமராதல் உண்டோ.

அப்பர்

அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்.

9, 10. யானை ஏற்றமும் குதிரை ஏற்றமும்.

[625-வது பக்கத்தொடர்ச்சி]

தேவாரச் செய்யுள்களால், தொண்டைமான்முல்லைக் காடுகளின் வழிச்செல்ல யானையே தகுதியான வாகனமாய்க் கொண்டனனென் றனுமானிக்கலாம். மலையின் மீது செல்லும்போது யானை மிகவும் கம்பீரமான காட்சி தரும்:—

மலையின்மிசை தனின்முகில்போல் வருவதொரு
மதகரியை மழைபோ லலறக்
கொலைசெய்துமை யஞ்சவுரி போர்த்தசிவன்
மேவுமலை கூறி வினவில்
அலைகொள்புன லருவிபல சுனைகள்வழி
யிழியவய னிலவு முதுவேய்
கலகலென வொளிகொள்கதிர் முத்தமவை
சிந்துகா ளத்தி மலையே.

சம்பந்தர்.

யானைக்கு மனிதர்சுபாவமும்குணங்களும் பலஉள. அரசனில்லா நாட்டில் அரசனைத் தேர்ந்தெடுப்பதற்குப் பட்டத்துயானையை அலங்கரித்து மாலையுடனனுப்புவதும், அது மாலைசூட்டும் மனிதன் தக்க அரசனாய் முடிவதும், முற்காலத்திற்குரிய வழக்கங்களாம். சேரமான்பெருமான், அவ்வாறே தேர்ந்தெடுக்கப்பட்டவரென்று பெரியபுராணம் கூறும். இத்தகைய பகுத்தறிவுள்ள மிருகம், தனது பெண்ணானையானது வேறொருகளிற்றை அடையுமாயின், § ஆண்யானை மிகவும் மனவருத்தமடையு மென்றும், அவ்வாறே ஒருபிடியும் தன்களிறு வேறுபெண்யானையை நோக்கிச் செல்லுமேல் வருந்தும் என்றுங் கூறியிருப்பதை வன்றொண்டர் பாசுரங்களில் வெகு அழகாய்க் காணலாம்:—

[யெடுத்து
மாற்றுக்களி றடைந்தாயென்று மதவேழங்கை
மூற்றித்தழ லுமிழ்ந்தும் மதம்பொழிந்தும் முகஞ்
[சுழியத்
தூற்றத்தரிக் கில்லேனென்று சொல்லியய லறியத்
தேற்றிச்சென்று பிடிசூழறுஞ் சீபர்ப்பத மலையே!

பிடிகள் தாம் பெற்ற ‡ கன்றுகளை மிகவும் அன்புடன் பாராட்டும்:—

நின்றுகவ ளம்பலகொள் கையரொடு
மெய்யிலிடு போர்வையரும்
நன்றியறி யாதவகை நின்றசிவன்
மேவுமலை நாடிவினவில்
குன்றின்மலி துன்றுபொழி னின்றகுளிர்
சந்தின்முறி தின்றுகுலவிக்
கன்றினொடு சென்றுபிடி நின்றுவிளை
யாடுகா ளத்திமலையே.

சம்பந்தர்.

மாதர் தமது கணவரிடம் அன்பு செலுத்தி அவருக்கு வரும் துன்பத்திற் றாம் ஈடுபடுவதுபோல், காட்டில் இரைதேடிச் § சென்ற ஆண்யானை ஆளியால் கொல்லப்படுமாயின் பெண்யானை வயிற்றிலுள்ள கர்ப்பமும் சிதைய ¶ வருந்துமென்று முற்காலத்தவரெண்ணினர். ஆகையால் பற்பல நற்குணங்கள் மிகவாய்ந்த இம்மிருகத்தின் வாழ்க்கையில் மனிதர்தம் * இல்வாழ்க்கையில் நிகழும் சிற்சில சம்பவங்களைக் காணலாமென்பதைத் திருநாவுக்கரசுநாயனார் திருவாக்காலுந் தெரிந்துகொள்ளலாம்.

மாதர்ப் பிறைக்கண்ணியானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாம லையா றடைகின்ற போது
காதன்ம டப்பிடி யோடுங் களிறுவ நவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்

திருவையாறு - பண்-காந்தாரம் 1.

* காரேனு களிற்றுரிவைப் போர்வை யான்காண்
கற்பகங்காண் காலனையன் றுதைசெய்தான்காண்
ஊரேறு முடைதலையிற் பலிகொள் வான்காண்
உத்தமன்காண் ஒற்றியூர் மேவினான்காண்
ஆனேறொன் றதுவேறு மண்ணல் தான்காண்
ஆதித்தன் பல்லிறுத்த வாதிதான்காண்
தேனேறு மலர்ச்சோலைத் திருவா ரூரில்
திருமூலட் டானத்தெஞ் செல்வன்தானே.

திருவாரூர் - திருத்தாண்டகம் 4.

§ இழைத்த விடையா ளுமையாள்
பங்க ரிமையோர் பெருமானார்
தழைத்த சடையார் விடையொன்
றேறித் தரியார் புரமெய்தார்
பிழைத்த பிடியைக் காணதோடிப்
பெருங்கை மதவேழம்
அழைத்துத் திரிந்தங் குறங்குஞ் சார
லண்ணாமலை யாரே.

சம்பந்தர்.

‡ இழைமேவு கலையல்கு லேந்திழையா
ளொருபாலா லெள்கா
துழைமேவு முரியுடுத்த வொருவனிருப்
பிடமென்ப ரும்ப ரோங்கு
கழைமேவு மடமந்தி மழைகண்டு
மகவினொடும் புகவொண் கல்லின்
முழைமேவு மால்யானை யிரைதேரும்
வளர்சாரன் முதுகுன் றமே.

சம்பந்தர்.

§ சென்றி லிடைச்செ டிநாய்குரைக்கச் செடிச்சிகள்
மன்றி லிடைப்பலி தேரப் போவது வாழ்க்கையே?
குன்றிடைக் களிறாளி கொள்ளக் குறத்திகள்
முன்ற லிடைப்பிடி கன்றிடும் முதுகுன் றரே.

சுந்தரர்.

¶ கொன்று செய்த கொடுமையாற் பலசொல்லவே
நின்ற பாவவினை கடாம்பல நீங்கவே
சென்று சென்று தொழுமின் றேவர் பிரானிடம்
கன்றி னோடுபிடி சூழ்தண் கழுக்குன் றமே.

சுந்தரர்.

* வெளிறு தீரத் தொழுமின் வெண்பொடி யாடியை
மூளிறி லங்கு மருவாளன் மூர்த்தி யுறைவிடம்
பிளிறு தீரப் பெருங்கைப் பெய்ம்மத மூன்றுடைக்
களிறி னோடு பிடிசூழ் தண்கழுக் குன்றமே.

சுந்தரர்.

இவ்வாறு கண்டதில், கண்டறியாதன பல அப்பர் கண்டேனென்கிருர். சிவசத்தி சொரூபத்தை இயற்கையிற்கண்ட இலக்கணமோ?

மிருகங்களில் ஆணைப்போல், பெண்ணும் உரம் வாய்ந்தனவும் பயன்படுவனவுமாவன, யானையும் குதிரையுமே யாகும். யுத்தகளத்தில் ஆண்யானைகள் போர் செய்து கொலைத்தொழில் புரிவதுபோல் பெண்யானையும் செய்யவல்லதென்பதைச் சம்பந்தர் தேவாரத்தினின்றும் அனுமானிக்கலாம்.

இலைத்தலை மிகுத்தபடை யெண்கரம்
 விளங்கவெரி வீசிமுடிமேல்
அலைத்தலை தொகுத்தபுனல் செஞ்சடையில்
 வைத்தவழ கன்றனிடமாம்
மலைத்தலை வகுத்தமுழை தோறுமுழை
 வாளரிகள் கேழல்களிறு
கொலைத்தலை மடப்பிடிகள் கூடிவிளை
 யாடிநிகழ் கோகரணமே.

இக்காலத்தைப்போல் யானைகள் அக்காலத்தில் நம் தேசத்தில் அபூர்வமானவையல்ல. பாவலர்க்கும் வெகுமதியாய் அளிக்கப்பட்டன. ஆகையால் அரசர் சேனை பெரும்பாகம் யானைப்படையா யிருந்தது.

குதிரைப்படை: அச்வப் பரீட்சை

குதிரையானது இக்காலத்தைப்போல் அக்காலத்தில் விலை குறைவான பொருளன்று. ஏனெனில் குதிரைகள் நமது நாட்டிலுள்ள காடுகளில்உற்பத்தியாகும் மிருகமன்று. யவனதேசத்தினின்று (Arabia) கப்பல்மார்க்கமாய்த் தமிழ்நாட்டிற்கு வரும். யானையைக் காட்டிலும் வேகமாய் ஓடத்தக்கதும் தீனிச்செலவு அதிகமின்றிப் பயன்படத்தக்கதும் குதிரையே. நமது அரசர் முற்காலத்தில் போர்முனைக்குப் பயன்படுமென்றே குதிரைகளை அதிகமுங் கருதி வாங்குவார். இக்காலத்தில் நாம் காணும் மட்டக்குதிரைகள், தட்டுவாணிக்குதிரைகள், பைகோ குதிரைகள், அக்காலத்திற் றமிழ்நாடெங்கும் காணலாகா. வீரர்கள் ஏறிச்செல்லவும், பெரிய இரதங்களை இழுக்கவும் குதிரைகள் பயன்பட்டன. இன்றும் கோயில் ரதங்களில் அச்சின்னங்களைக் காணலாம்.

புரவி யேழும் மணிபூண் டியங்குங் கொடித் தேரினைப்
பரவி நின்றுவழி பாடுசெய்யும் பரமேட்டியூர் [ன்
விரவி ஞாழல்விரி கோங்குவேங்கைசுர புன்னைகள்
மரவ மவ்வன் மலருந் திலதைம் மதிமுத்தமே.

எனச் சம்பந்தர் பாடுவதைக் காண்க.

அரசர்கள் யானையேறிப் பவனி வருவதுபோல், இவுளியேறிச் செல்வதுமுண்டு. சுந்தரமூர்த்திநாயனார் திருக்கைலாயத்திற்குச் சென்றபோது சேரமான்பெருமான் தனது அச்வத்தின்மீது சென்றதாய்ப் பெரிய புராணம் கூறும். எனவே அச்வம் பரிசுத்தமான மிருகமெனவும், அரசரும் ஏறிச் செல்வதற்குரிய அந்தஸ்து பெற்றிருந்ததெனவும் அனுமானிக்கலாம். இக்காலத்திலும் அரசவுடை தரித்து அலங்கரிக்கப்படும் மணமகனுக்கு மணக்கோலத்துடன் செல்லத்தக்க ஊர்தி, குதிரையேயாம்.

மணக்கோலங்கொண்டிருந்த சுந்தரமூர்த்திநாயனார் திருநாகைக்காரோணத்திற்கு எழுந்தருளியபோது தனது உபயோகத்திற்குப் பல பொருள்கள் வேண்டுமெனப் பதிகம் பாடுகின்றவர், காற்றுப்போல் வேகமாய்ச்செல்லத்தக்க வலியபுரவியொன் றளிப்பீரென வேண்டுகின்றது காண்க:—

மாற்றமே லொன்றுரையீர் வாளாநீ ரிருந்தீர்!
 வாழ்விப்பனெனவாண்டீர்! வழியடியே னுமக்கு;
ஆற்றவேற் றிருவுடையீர் நல்கூர்ந்தீ ரல்லீர்
 ரணியாரூர் புகப்பெய்த வருநிதிய மதனில்
தோற்றமிகு முக்கூற்றி லொருகூறு வேண்டுந்
 தாரீரே லொருபொழுது மடியெடுக்க லொட்
காற்றனைய கடும்பரிமா வேறுவது வேண்டுங் [டேன்
 கடனாகைக் காரோண மேவியிருந் தீரே.

திருநாகைக்காரோணப் பதிகம் 8.

பத்துமுழத்திற் கப்பால் மனிதனைப் பயந்தொதுங்கச்செய்யும் குதிரைகளுக்கு, பயம்விளைவிக்கும் கெம்பீர முகவிலக்கண முண்டு. இதனாலேயோ ஏனைய காரணங்களினாலேயோ யமதூதர்கள் சிலர் குதிரைமுகமுடையவர்களெனப் புராணங்களில் வர்ணிக்கப்படுகின்றனர் *.

தேவாரத்தில் அச்வங்களைப்பற்றிய செய்யுட்கள் சிலவேயாதலால், அப்பர் காலத்தில் குடிவளம் முதலிய தேசவளங்களைக்காட்டப் புரவிகள் அத்துணை விசேடமாய் எண்ணப்பட்டனவாய்க் காணப்படவில்லை. ஆயினும் அவற்றைச் சிறப்பாய்ப் பேணிப் பெருமக்கள் நமது நாட்டில் யுத்த நேரங்களிலும் ஏனைய சமயங்களிலும் வைத்திருந்த $ சீரையை ஆங்காங்குத் தேவாரங்களில் உணரலாகும்.

* உள்ளமிக்கார் குதிரைம்முகத் தாரொரு காலர்கள்
 எள்கலில்லா விமையோர்கள் சேருமிட மென்பரால்
 பிள்ளை துள்ளிக் கிளைபயில்வ கேட்டுப் பிரியாதுபோய்க்
 கிள்ளையேனற்கதிர்கொணர்ந்துவாய்பெய்யுங்கேதாரமே.

சம்பந்தர்.

$ அப்பர் காலத்தில் அரசர்கள் யானைமீதேறிச் செல்வதே குதிரையேற்றத்தைக் காட்டிலும் அதிகமாய்ப் பாராட்டப்பட்டது போலும்:—

வாராண்ட கொங்கையர்சேர் மனையிற் சேரோ
 மாதேவா மாதேவா வென்று வாழ்த்தி
நீராண்ட புரோதாய மாடப் பெற்றோம்
 நீறணியுங் கோலமே நிகழப் பெற்றோம்
காராண்ட மழைபோலக் கண்ணீர் சோரக்
 கன்மனமே நன்மனமாக் கரையப் பெற்றோம்
பாராண்டு பகடேறித் திரிவார் சொல்லும்
 பணிகேட்கக் கடவோமோ பற்றற் றோமே.

திருமறுமாற்றத் திருத்தாண்டகம். 3.

மாதவி மாதவம்

[629 - வது பக்கத் தொடர்ச்சி]

7. கண்ணகி கண்ட கனா.

மெல்லிய பூங்கொடியன்ன கண்ணகி கதிரவன்தன் கொடுமையால் கால்கள் கொப்புளங்கொள்ளவும் திருமுகத்தே சிறுவியர்வரும்பவும், மேல்நடக்கவியலாது தளர்வதைக்கண்ட கவுந்தியடிகள் கோவலனை விளித்து, “நம் செல்வி, இக்கடிய கதிரின் வெம்மை தன் மெய்யிற்படப் பொறுள்; அதுவுமன்றி இவள் சிற்றடியும் வெய்ய பருக்கைக்கற்களையுடைய இப் பாலைநெறியிற் படிந்தில; ஆதலின் இப்பகலவனின் கொடிய ஆளுகையில்லாத இரவே வழிச்செலவிற்கு இனிமை தருவது; மற்றுச் செங்கோன்மையுடைய தென்னவன் புரக்கும் நன்னாடு இதுவாகலின் வழியிடையே நாம் அஞ்சத்தகுவன எவையுமில; ஆதலின் இன்றையபகலில் ஈண்டுத்தங்கி இரவிற் செல்வோம்” எனக் கூறினர். கோவலனும் ஒருப்பட்டு அற்றைப்பொழுது ஆண்டிருந்து, அங்கண் விசும்பில் திங்கட்செல்வன் வான்மீன் கணத்தொடு பாற்கதி பரப்பித்தோன்ற மூவரும் புறப்பட்டனர். அவ்விரவு முழுதையும் கண்ணகியும் அவள்காதலனும் அடிகளின் அறவுரைகளைக் கேட்டவண்ணமே தொலையாத அப்பெரும் வழியை நடந்து தொலைத்தனர். கீழ்வானம் வெளுத்தது. காட்டுக்கோழிச் சேவல்கள் கதிரவன் வரவை யறிவிப்பனபோற் கூவின. அம்மூவரும் தம் செலவை விடுத்தனர். கோவலன் காலைக்கடன் கழிப்பதற்கு ஓர் ஒதுக்கிடத்தே போந்தான். முன்னே அவன் நீர்கொணரச் சென்றவப்பொழுது இயக்கி ஒருத்தி வயந்தமாலையின்வடிவொடு தோன்றினள். மற்றீங்கே புகார்நகரத்து வாழும் கௌசிகன் என்னும் ஓர் பார்ப்பனன் தோன்றி, நீடிய கவலையால் வாடிய மேனியொடு வடிவுவேறுபட்டிருந்த இந்தக் கோவலனைக்கண்டு இவன் கோவலனே அல்லனே என ஐயுற்று, அவ் வையம்நீங்க அருகே ஓர் பந்தர்மீது படர்ந்துள்ள குருக்கத்தியைக்குறித்துக் கூறுவான்:- “கோவலன் பிரிவிற்காற்றாது காமத்தீயால் துயருற்றும், பல்லோர்பகர் அலரினை (பழிச்சொல்) பொறாமலும் வருந்திநின்ற மாதவியைப்போல், நீயும் இளவேனில் நீங்க, அதற்காற்றாது, வெம்மை மிக்க இம்முதுவேனிற் பருவத்து வெயிலால் துயருற்று, அலரைப் (மலர்) பொறாது வளைந்து வருந்தினாய். இங்ஙனம் நேர்ந்தது உனக்கும் “மாதவி” யென்னும் பெயரொன் றுண்மையா லேயோ?” எனக் கூறினன். அதைக்கேட்ட கோவலன் “ஐய! நீர்கூறியஇவற்றின் பொருள் யாது?” என வினவலும், கௌசிகன் ஐயம் ஒழிந்து, மாதவியென்னும் பெயரைக்கேட்ட மாத்திரத்தே முகமாற்றம் அடைந்து தன்னைவினவிய இவன் கோவலனேயெனத் தெளிந்து கூறுகின்றான்:- “ஐய! உமது பிரிவால் உம்முடைய பெற்றோர் மணியிழந்த நாகம்போன்று அழகும் ஒளியும் இழந்து வருந்தலும், நெருங்கிய கிளைஞர் இன்னுயிரிழந்தயாக்கையென்னச் செயலற்று நோதலும் அறிமின்: மற்றுமது பிரிவை வயந்தமாலையால் மாதவி யுணர்ந்து, எழுநிலைமாடத்து இடைநிலத்தே, ஓர் மென்பூஞ்சேக்கையில் தன்னறிவிழந்து, மின்னற்கொடியெனச் சோர்ந்து கிடத்தலை யானறிந்து, ஆண்டுச்செல்ல, அவள் என் அடியில் வீழ்ந்து அரற்றி, “ஐய! நீர்தான் எனது துயரைக் களைதல்வேண்டும்” எனக் கூறித் தன் கையால் முடங்கலொன்று தீட்டி “இதனை என் கண்ணிற் கருமணி போல்வானுக்குக் காட்டுவீராக” என்று அவ்வோலைம் என்கையி லீந்தாள். யான் அதனைக் கொண்டு பல இடங்களில் பல தேயங்களில் அலைந்து, இன்று ஈங்கடைந்தேன்.” எனக்கூறி மணநாறும் மலர் ஓலையைக் கோவலன் கையிற்கொடுத்தான். நீரறத்துச் செல்லலால் உண்டாய கருமணல் ஒழுங்குபோன்ற தனது அழகிய கூந்தலால் மடித்துள்ள அவ்வோலையின் மேற்புறத்தே, மாதவி ஒற்றிய அடையாளம், முன்னே தான் அவளோடுகூடி யுறைகின்ற காலத்தே, வாசநெய்பூசிய தன்மையைத் தனக்குணர்த்தியதாகலின், கோவலன் அதனைக் கடிதிற் பிரித்துப்பாரானாய், மனமயங்கிப் பின்னர்ப் பார்த்துக் கீழ்வருமாறு படித்தான்:—

“மெய்ந்நெறியுணர்ந்த மேலோய்! தேவரீர் திருவடிகளைத் திசைநோக்கித் தொழுதேன்; இதைத் திருவுளத்தே கொண்டருள்க. இருமுதுகுரவர் பணிவிடையொழிந்ததன்றி, கற்பிற்சிறந்தபொற்புடையாட்டியொடு இரவிடைக் கழிதற்குவந்த பிழைப்பென்னை? அஃதறியாது என்பிழைப்போவென்று எளியளென் நெஞ்சம் அலமருகின்றது. உயிரனையீர், மற்றது என்பிழைப்பே யெனினும், மகளிர்சொல் குற்றமறாத சொல்லென்று திருவுளம் பற்றல்வேண்டும். இதுவுமன்றி இதுபொழுது துணையற்று வருந்தும் அளியள் நெஞ்சிற்கு ஆறுதலளித்தல் வேண்டும். அன்ப, இவ்வாற்றான் நினக்கோர் புகழ் குறைபாடின்றிப் போற்றுவாயாக”-இம் மொழிகளைப் படித்ததும் கோவலன்மனம் கரைந்துருகியது. “அந்தோ! வீணே ஒரு பழியுமறியாத மாதவியைத் தவறுடையாள், பொய்ந்நெறி நிற்பவள் எனக் கூறினேனே! உண்மையில் அவள்மீது ஒரு சிறிதும் தவறில்லை. யானே தவறிழைத்தேன்” எனத் தெளிந்து “கோசிக, என்பிரிவால் வருந்தும் காதலி மாதவிபால் எளியேன் அறியாதுபுரிந்த தவறை மன்னிக்குமாறு வேண்டினேனெனக் கூறுதி. இரவிலென் மனைவியொடு நகர்நீங்கியது பொருளீட்டல் நோக்கமேயன்றி, மற்றவ் வணங்கிடத்துக்கொண்ட வெறுப்பென நினைத்தல் வேண்டா. யான் முன்போல் பெரும் பொருளாளன் ஆயினன்றி நம்நகர் மீளேன். அதுகாறுமச் செல்வியை ஆற்றியிருக்குமாறு அறிவி. அத்துடன் முதுமைப்பருவத்தே பெற்றோர்க்கு வேண்டுவ புரிந்து பணிவிடையாற்றாது, மனைவியொடு இரவிடைப் பிரிந்து பெருந்தவறியற்றிய ஏழையை மன்னித்தருளுமாறு, அன்னார் மலரடியைத் திசைநோக்கிக் கைகூப்பித் தொழுததாகவும் கூறி, அடியேன் பொருட்டு அவர்கள் அடையும்இன்னலை விரைவிற் சென்று தவிர்ப்பாய்” எனக் கூறிப் பிரிந்து தன்மனைவி யிருப்பி

டம் சேர்ந்தான். ஆங்கேவனதேவதையின் சீர்த்தியைப் பாடிவரும் பாணரைக்கண்டு "பெரியீர், இவணிருந்து மதுரைமூதூர் இன்னும் எத்துணைக்காவதம் உள்ளன?" என்று வினவினன். அதற்கவர்கள் "அதோ! மணங்கமழ் கலவைச்சேறளைந்து மல்லிகை முதலிய மலரிணை பொருந்தி; அடுக்களைகளில் உணவு சமைத்தற்கும், அப்பவாணிகர் அப்பஞ்சுடுதற்பொருட்டும், மைந்தரும் மகளிர்தாமும் மயிர்க்கும்துகிற்கும் மணஞ்சேர்த்திப் புலர்த்தற்பொருட்டும், வேதியர் வேள்விச் சாலையில் நாட்டின்நலத்தினைக் கருதியும் ஊட்டிய பல்வேறு வகைப்பட்ட புகையினை யளாவி; யாவரேயாயினும் ஒருமுறை தம்மை நுகர்வரேல் பின்னர் வீட்டுலகமென் வேறொன் றுண்டென்பதையும் அவர் மறக்கும்படி செய்யும் அத்துணை உயரிய பாண்டியனது கோயிற்கணுள்ள கெழுமிய மணமிகுகலவைத் தொகுதி தன் மெய்யெல்லாங் கமழ, சங்கப்புலவர் புகழ்ந்தேத்தத் தவழ்ந்துவரும் இத்தென்றல் மதுரைத் தென்றலே யாகும். மற்றிதற்குப் பொதியிற்றென்றலும் ஒவ்வாது. ஆதலின்,ஐய, மதுரை மூதூர் கனிசேய்த் தன்று; மிக அண்மியதே. ஆண்டுச் செல்வார் நும்போல்வா ரன்றி, மற்றெவரேயாயினும் நில்லென்பா ரில்லை" என அவன் வினவிற்குத் தெளிவாக மறுமொழி தந்ததோடு, மிகைப்படவும் சில சொல்லிச் சென்றனர். அற்றைஞான் றாண்டுத்தங்கிப் பிற்றைஞான்று செல்லக்கருதிய கோவலனும் அன்னாருயிரனையாளும் கவுந்தியடிகளும் முன்னைய ஞான்றை முறைமையைப்போலவே அன்றைய இரவின் கடையாமத்தின் நிலவொளியிலே மேல்நடக்கலுற்றனர். மதுரைமூதூர்க் கடவுளர்கோட்டத்தும், மன்னவன் கோயிலிலும் ஒலிக்கும் காலைமுரசங்களின் பெருமுழக்கம் அங்ஙனம்நடந்த அவர்தம் செவியகத்தே ஒலித்தன. அவ்வளவில் அவர்கள் இனி வழிநடைத் துயர் இல்லையென மகிழ்ந்தனர். உருக்கிவார்த்த பொன்னுருண்டையெனக் கதிரவன் கீழ்க்கடலிற்றோன்றினன். மூவரும் வையையென்னுமவ் வளநதியின் வடகரையடைந்து, ஆண்டுள்ள ஓடத்தால் அந்த யாற்றைக் கடந்து தென்கரைபோந்து, மதுரைநகர்க்குப் புறத்தே அறவோருறையும் சேரியிற் றங்கினர்.

* * *

மாதவத்தாட்டி மாதரியிடத்து ஆயிழைதன்னை யடைக்கல மளித்தமை.

கவுந்தியடிகள் கோவலனை விளித்து "இப் புறஞ்சேரியில் துறவிகளன்றி மற்றையோர் தங்கார். ஆதலின், நீ நகருட்சென்று ஆண்டு உறைதற் கேற்றவிடம் தேர்ந்து வாராய். அன்றியும் அந்நகர் வணிகர் உன்னை 'மாசாத்துவான் மகன்' என அறியின் மகிழ்ந்தேற்றுக் கொள்வார்" எனக் கூறினர். கோவலனும் பதியெழுவறியாப் பழங்குடி கெழீஇய மதுரைமூதூர் காண்டலைவிரும்பிப் புறஞ்சேரிவிடுத்து மாநகர்புக்கு, சிறப்பின்மிக்க இரத்தினக் கடைத்தெருவும், பொற்கடை வீதியும், புடைவைக் கடைத்தெருவும், கூலங்குவித்த கூலமறுகும், தேரோடு வீதியும், நாற்சந்திகூடும் கவர்நெறிகளும், கோயிற் கடைத்தெருவும் எனப் பலதிறப்பட்ட தெருக்களிலே பகலவன் வெங்கதிர் படாவாறு இட்ட பசுங்கொடிபடைந்த பந்தர் நீழலில், அவற்றின் எழிலும் வளனுங் கண்டு மகிழ்சிறந்து, தான் உறைதற்கேற்ற விடம் எதுவெனத் தேர்தற்பொருட்டு, வந்த தன் வினையை மறந்து அடிகள் உறையும் புறஞ்சேரி போந்தான். போந்தவன் அடிகளிடத்தே மதுரையின் சிறப்பையும்தென்னவன் திறலையும் கூறுநிற்புழி, புகார்ப்பட்டினத்திற் கருகேயுள்ள தலைச்செங்கோடென்னும் ஊரினனும், கோவலனுக்கு நட்பாளனுமான மாடலன் என்னுமோர் மறைமுதற் செல்வன் மலயமலையை வலங்கொண்டு குமரியாடி வருகின்றவன், அதனால் நேர்ந்த வழிநடைத் துயரை நீக்குதற்கு அடிகள் உறையும் அப் பள்ளியகத்தே புக்கான். அங்ஙனம் புக்க மாடலனைக் கோவலன் கண்டு வணங்குதலும், அம்மறையோன் ஆசிகூறி "அன்ப, யானறிய நீ இம்மையிற் செய்தனவெல்லாம் நன்மையேயாக, இங்ஙனம் நீ இம்மாணிக்கக் கொழுந்துடன் இவண்போந்து தனித்துயருழந்தது உம்மையிற் செய்த தீவினைப்பயனேயோ?" என வினவினன். அதற்குக் கோவலன் "தோழ! இந்நகரிலே என் ஆருயிரனையாள் நடுக்கமிகவுற, யான் உடுத்துள்ள எனது உடை பிறரால் கொள்ளப்பட்டு, அடியேன் ஓர் கடாவின் மேலேறவும்; அணிதிகழ் செல்வி மணிமேகலையை மாதவி துறவறத்தே நிறுத்தவிழைந்து அறவணவடிகள் சேர்ப்பிக்கவும் ஓர்கனவு இன்று கடையாமத்தே கண்டேன். அது இப்பொழுதே இவ்விடத்து வந்துறுமோ?" என்றனன். அதற்குக் கவுந்தியடிகளும் மாடலனும் "துறவிகளன்றி மற்றையோர்க்கு இப்புறஞ்சேரியிருப்பு ஒவ்வாது; நீ உனது காதலியுடன் பகலவன் மறைவதன்முன்னே இவ்விருப்பை நீத்து நகருட் புகுதலே தகுதி" எனக் கூறுநிற்புழி, அப்புறஞ்சேரியிடத்தே வைகும் "ஆரியாங்கனை" யென்னும் ஓர் பெண்தெய்வத்திற்குப் பாற்சோறு காட்டி வழிபட்டுவருபவளாகிய மாதரியென்னும் ஓர் ஆயர் குலமாது அடிகளைக்கண்டு தொழுதனள். தொழலும் அடிகள் "ஆ காத்தோம்பி ஆப்பய னளிக்கும், கோவலர் வாழ்க்கையில் கொடும்பாடில்லை; இவளோ முதுமகள், தீதிலள், செவ்வியள், அளியள்; ஆதலின் இம்மாதரியிடத்தே கண்ணகியை அடைக்கலமாக வைப்பதால் வருந்தீங்கு யாதுமில்லை" யெனத் தேர்ந்து, "மாதரி, கேள், இம்மடந்தைதன் கணவனது தந்தையின்பெயரை இவன்குலத்துள்ள இந்நகர்ச்செல்வர் கேட்டனராயின் அரும்பொருள் பெற்றாரைப்போல இவர்களை நல்விருந்தாக எதிர்கொண் டழைத்தேகுவர். ஆதலின் அதுகாறும் இச்செல்வியை நான் உனக்கு அடைக்கலமாகத் தந்தேன். இடைக்குல மடந்தாய், இனி நீ ஆயமும் சாவலும் ஆயிழை தனக்குத் தாயும் நீயே" என்றனர். மாதரியும் மகிழ்சிறந்து ஒப்பினள். மீண்டும் அடிகள் மாதரியை நோக்கி "ஆயர்குலச் செல்வி, தவத்தோ ரடைக்கலந்தான் சிறிதாயினும், மிகப்பேரின்பம் தருவதைக் காண்டி. அன்றியும் யான் உன்னிடத்து அடைக்கலமாக ஈந்த கற்புக் கடம்பூண்ட இத்தெய்வமல்லது பொற்புடைத் தெய்வம் வேறுகண்டிலம்; அதனால் இக் கற்புடைச் செல்வி வாழும் நாட்டில் வானம் பொய்யாது, வளம் பிழைப்பறியாது, நீணில வேந்தன் கொற்றஞ் சிதையாது; மகளே, அதனால் இவளை வைத்துப் போற்றல் உலகுபுரந் தூட்டலோ டொக்குமன்றே" என அறிவுரை புகட்டினர். மாதிரி அடிகளையேத்திக் கண்ணகியும் அவள் காதலனும் உடன்வர, ஞாயிறு பொற்கதிர் பரப்பிக் குடகமலை யுச்சியை யடைந்த அம் மாலைப்போதிலே தன் மனை யடைந்தாள்.

* * * *

கோவலன்தன்னை ஊழ்வினை யுற்றமை

மறுநாள் கோவலன் தனது ஆருயிரனையாள் அமுதினும் இனிமைபெறச் சமைத்த சோற்றையுண்டு, அடைக்காய் தரிக்கும்பொழுது அவளைவிளித்து "அன்புருவே! வறுமொழியாளரொடு வம்பப் பரத்தரொடு, குறுமொழிக்கோட்டி நெடுநகைப்புக்குப் பொச்சாப்புண்டு பொருளுரையாளர் நச்சுக் கொன்றேற்கு நன்னெறி யுண்டோ? இருமுது குரவர் ஏவலும் பிழைத்தேன்; நினக்குச் சிறுமையுஞ் செய்தேன்; அந்தோ! இவ்வழுவொழுக்கம் இழுக்கமென்றும் பார்த்திலேன். இத்தகைய பாவியேன் மதுரைமூதூர் செல்ல விழைகின்றேன்; நீயும் உடன்வரல் வேண்டும்' என்றவளவில் "என்னுடன்வர ஒருப்பட்டனையே" எனத் தன் அறியாமையொடு அவள்பேதைமையையும்பழிப்பான் போல் மனமிரங்கிப் புகழ்ந்தான். அதுகேட்ட கண்ணகியார், "நுமது பிரிவால் அறவோர்க்களித்தலும் அந்தணரோம்பலும், துறவோர்க்கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும், இழந்த என்னை நும் அன்னையும் அப்பனும் காண நேருங்கால்,யான் உமது பிரிவால் உற்றதுயரைக் கரந்தொழுகிப் புன்னகைபுரிந்து நின்றேனாக, அதுகண்ட அவர் எனது பொறையைப் பாராட்டி, எளியேனென் புன்முறுவல்பொய்முறுவலென அறிந்து மனம்வருந்தினர். அங்ஙனம் அவர்கள் துயர்மிக நீர்,போற்றாவொழுக்கம் மேவினீராகவும், உம்முடைய மொழியைச் சிறிதும் மாற்றாதமனவொழுக்க முடையேனாதலாலே உம்மொடு வர உடன்பட்டேன்" என்றாள். பின்னர்க் கோவலன் தனது மனைவியைப் பலபடப் பாராட்டி "யான் நினது சிலம்பிலொன்றை விற்றுவருந்துணையும் அமைந்திரு" எனக் கூறிப் பிரிதலாற்றாளைப் பிரிந்து, தளர்ந்த நடையோடே கடைத்தெரு வடைந்தான். ஆங்கே ஓர் பொற்கொல்லன் பணியாளர் நூற்றுவர் தன்னைச்சூழ எதிரே வருதலைக்கண்டு, அவனையண்மி "கைவினைச் செல்வ, காவலன்தேவிக் காவதோர் சிலம்பினை, நீ விலைமதிக்க வல்லையோ?" என வினவினன். அதற்கவ் வினைஞன் "ஐய! அடியேனறியேனாயினும் வேந்தர் முடிமுதற் கலன்கள் சமைப்பேன் யான்" எனக் கூறிக் கோவலன் கையகத்ததாய சிலம்பினைக் கண்ணுற்று, "இச்சிலம்பு கோப்பெருந்தேவிக்கல்லது பிறர்க்கு வினாதற்குந் திறனில்லை; யான் இச்செய்தியை அரசர்க் குணர்த்திவருமளவும் எனதிருக்கைக் கருகேயிரு" எனக்கூறித் தென்னவன் கோயில் நண்ணினன். ஆங்கே தன்தேவியின் ஊடல்தீர்த்தற்பொருட்டு அவள்மனை நோக்கிச்செல்லும் அரசனை யிடைவழியேகண்டு, அவன் மலரடி தன் சென்னிபட வணங்கிநின்று, "மன்னர் பெரும, கன்னகமின்றியும் கவைக்கோலின்றியும், துன்னிய மந்திரந் துணையெனக்கொண்டு, வாயிலாளரை மயக்குதுயி லுறுத்துக் கோயிற்சிலம்பு கொண்ட கள்வன், கல்லென் பேரூர்க் காவலர்க்கரந்தென், சில்லென் சிறுகுடிலகத்திருக்கின்றான்" என்றனன். அவ்வளவில் வினைவிளை காலமாதலின் சினையலர்வேம்பன் யாவதும் தேரானாகி, ஊர்காப்பாளரைக் கூவி "ஈங்கென் தாழ்பூங்கோதை தன்காற் சிலம்பு, கன்றிய கள்வன் கையதாகிற் கொன்றச் சிலம்பு கொணர்க வீங்'. கென ஆணையிட்டான். கொலைத்தொழிற் கொல்லன் தான் நினைத்தது பலித்ததென்னுந் தருக்கொடு மன்னன் ஏவலாளர் சூழ்தரக் கோவலனையடைந்து 'இவர் அரசனேவலிற்சிலம்புகாணியவந்தோர்" எனக்கூறிச் சிலம்பினை வாங்கி, அரசன் பணியாளரிடத்தே தனிப்பட "இச் சிலம்பு நம்பெருமாட்டியதே; இவனே கள்வன்" எனக்கூறிக் காட்டினன். அதுபொழுது அப்பணியாளருள் ஓர் வெறியன் கோவலனை வாளால் வீசினன். அந்தோ! அவன் பண்டை யூழ்வினைவிளைவால் காவலன்செங்கோல் வளைஇய வீழ்ந்தனன்.

நண்ணு மிருவினையும் நண்ணுமின்கள் நல்லறமே
கண்ணகிதன் கேள்வன்பொய்க் காரணத்தால்— [மண்ணில்
வளையாத செங்கோல் வளைந்ததே பண்டை
விளைவாகி வந்த வினை.

* * * *

நம்மாழ்வார் வைபவம்.

திருவாய்மொழி.

[638-வது பக்கத் தொடர்ச்சி]

1-ம் பத்து 10-ம் தசகம்.

7-ம் பாசுரம்.

எந்தையே என்றும் எம்பெருமான் என்றும்
சிந்தையுள் வைப்பன் சொல்லுவன் பாவியேன்
எந்தை எம்பெருமான் என்று வானவர்
சிந்தையுள் வைத்துச் சொல்லும் செல்வனையே.

"இப்படித் தம் திருவுள்ளத்தோடு எம்பெருமானை அநுபவிக்கிற ஆழ்வார், அவனது உத்கர்ஷத்தையும் தம்முடைய தாழ்வையும் உன்னிப் பார்த்து அயர்வறுமமர்கள் தங்கள் சிந்தையுள்ளேவைத்துச் சொல்லும் மகாப்பிரபுவான ஸ்ரீமானை நான் என் வாய்கொண்டு புகழ்ந்து அவன் மாண்பைக் குறைத்துவிட்டேன்—என்ன பாவி, யான்" என்று தம்மை நிந்தித்துக் கொள்கிறார்—ஆறாயிரப்படி.

குறிப்பு:—பகவானுடன் கலந்த கலவியைப்பற்றிச் சந்தோஷித்து ஆற்றியிருக்க வேண்டியவராகிய இவர் இவ்விதம் மனம்நொந்து கழறுவதற்குக் காரணம்,தற்காலம் அவர் புத்தியஸ்தமான அநர்ஹதாநுஸந்தானமே என அறிந்துகொள்க.

8-ம் பாசுரம்.

செல்வ நாரண னென்றசொல் கேட்டலும்
மல்கும் கண்பனி நாடுவன் மாயமே!
அல்லும் நன்பகலும் இடைவீ டின்றி
நல்கியென்னை விடான் நம்பி நம்பியே.

அவதாரிகை:—பகவானோடு தாமும் தம் நெஞ்சும் உள்கலந்து அநுபவிக்கும் காலத்தே, "செல்வ நாரணன் என்று கேட்டலும்" எம்பெருமான் தூரஸ்த

ளுக இருப்பதுபோல் பிரஸ்தாபம்வரக் காரணமென்ன எனில், இவர் தம் புத்தியால் அவனோடு கலப்பது அவனுக்கு ஏலாது என்று அநர்ஹதாநுஸந்தானம் செய்யவே, தான் தூர விலகிவிட்டதாகத் திருவுள்ளம் பற்றிக் கூறியதாகக் கொள்ளவேண்டும்.

உரை:— செல்வ நாரணன் - மஹாலட்சுமியுள்படச் சகல ஸம்பத்துக்களுமுடையஸ்ரீமந்நாராயணன், என்ற சொல் கேட்டலும், - என்ற சொற்களைக் கேட்டவுடன், கண்பனி மல்கும் - அவசரமாய்க் கண்கள் ஆநந்தபாஷ்பம் பொழியும். நாடுவன் - சொல்கேட்டவுடன் நானும் அவனை 'எங்குற்றாய் எம்பெருமானே' என்று தேடுவேன். மாயமே - இது ஆச்சரியந்தான். அல்லும் - இராத்திரியும், நன்பகலும்-நல்லபகலிலும் ("நல்" காகாட்சி நியாயமாய் இராத்திரியையும் பகலையும் தழுவுகிறது) இடைவீடின்றி - இடைவீடில்லாமல், நம்பி - நற்குணங்களால் நிறைந்த திருமாலார், நல்கி - என்பக்கல் சிநேகம்பாராட்டி, நம்பியே - என்னைத் தன்போல் பூரண நற்குணமுள்ளவனாக விசுவாசம்செய்து, விடான் - விட்டு அகல்வானல்லன்.

குறிப்பு:—இதென்ன ஆச்சரியம்! நான் அவனிடத்தில் வீழ்ந்து ஆசைப்பட்டு அவனைப்பற்றினால் அவன் என்னிலும் அதிகஆசைப்பட்டு என்னிடத்தில் வெகுமானம்செய்து என்னை விடமாட்டேன் என்கிறான். "யான் அவன்போல் பரிபூரணனோ; யான் அவனாகக் கூடுமா? தன்னைப்போல் என்னையும் நினைத்து அபிமானிக்கின்றானே" என்று சாற்றுகிறார்.

9-ம் பாசுரம்.

நம்பியைத் தென்கு றுங்குடி நின்றஅச்
செம்பொன் னேதிக ழும்திரு மூர்த்தியை
உம்பர் வானவர் ஆதியஞ் சோதியை
எம்பி ரானையென் சொல்லி மறப்பனோ.

அவதாரிகை:—ஏழாம்பாசுரத்தில் அவன் திறத்துப் படுவேனல்லேன் என்ற இவர் இப்பாசுரத்தில் அவனை மறப்பேனல்லேன் என்று கூறக்கூடுமோ என்றால், எட்டாம் பாசுரத்தில் கூறியபடி அவன் தன்னிடத்தில் சபலனாய் நின்றான் என்றவர், இப்பாட்டில், அவ்வளவு மாத்திரமல்லாது தன்னை விட்டுவிடாது கடைப்பிடித்துக் கொள்வதற்காக நித்தியஸூரிகளுடன் திருக்குறுங்குடியில் இனிது வந்து திவ்விய ஸௌந்தரியத்தோடு அவதரித்திருப்பவனைத் தான் எவ்வண்ணம் மறக்கக் கூடும் என்கிறார். இச்சந்நிதானம் தமக்கு நேரிடாதிருப்பின் மறக்க நேரிடுமென்று தோற்றுகிறது.

குறிப்பு:—'திருமூர்த்தி' என்றது ஹரன் பிரமன் இவர்களுக்குள்ளும் அந்தராத்மாவாக இருக்கைபற்றி- முன்பேயே குணங்களைக்கேட்டு அவன்பக்கம் விழுந்த எனக்குத் தன் அர்ச்சாவதார வடிவழகையும் காட்டி என் சமீபத்தில் நின்றானதலால் நான் அவனை மறக்க எங்ஙனம் முடியும்" என்பது கருத்து.

10-ம் பாசுரம்.

மறப்பும் ஞானமும் நானொன் றுணர்ந்திலன்
மறக்கு மென்று செந்தாமரைக் கண்ணொடு
மறப்பறவென் மனத்தே மன்னினான் தன்னை
மறப்ப னோவினி யானென் மணியையே.

பதவுரை:—மறப்பும் - அஞ்ஞானம், ஞானமும் - ஞானம், ஒன்று-என்றஒன்றையும், நான் உணர்ந்திலன் -நான் அறியேன்—(ஒன்று மறியாத ஜடன் என்பது தாத்பரியம்). மறக்குமென்று - ஆகையால் நான் மறந்துவிடக்கூடுமென்று, மறப்பற - நான் அவனை மறக்கக்கூடாதபடி, செந்தாமரைக் கண்ணொடு - செந்தாமரைபோன்ற தன் கண்களோடு, என்மனத்தே-என் மனதில், மன்னினான் தன்னை - ஸ்திரப்பிரதிஷ்டனாய் இருக்கிறவனை, என் மணியை-என் கையிலுள்ள ரத்நம்போல் சுலபமாய் அறியக்கூடியவனை; யான் - நான், இனி - இனிமேல், மறப்பனோ - மறக்கமாட்டுவேனோ?

குறிப்பு:—பகவானது செந்தாமரைக்கண்கள் தன் திவ்வியஸௌந்தரியத்தாலே ஜடவஸ்துக்களையும்கூட நல்லறிவுக்கு உய்த்து உணர்த்தும்—ஆதலால் அத்திருக்கண்களின் கடாக்ஷத்தால் நல்ல பிரக்ஞைவந்து அறிவுமுதிர்ந்து மறக்கமாட்டாதவன் நான் ஆயினேன், என்கிறார்.

11-ம் பாசுரம்.

மணியை வானவர் கண்ணனைத் தன்னதோ
ரணியைத் தென்குரு கூர்ச்சட கோபன்சொல்
பணிசெ யாயிரத் துளிவை பத்துடன்
தணிவிலர் கற்பரேல் கல்வி வாயுமே.

குறிப்புக்கள்:—மணி - சுலபனையும் சுவயம்தேஜோ விசிஷ்டனையு முள்ளவன்; தன்னதோரணி - ஆபரணமொன்றுமன்றியும் ஆபரணம்போல் தானே அலங்காரமாயிருப்பவன். சொல்பணி - திருவாய்மொழியாகிற இவ்வாக்குக் கைங்கரியம். தணிவிலர் - ஆற்றாதாராய், கற்பரேல் - பக்தியுடன் அறிவாராயின், கல்விவாயும்- வேதத்தில் ஓதிய பக்திமரபான பல வித்தைகள்போல் இத்திருவாய்மொழியே பகவானை அடைவதாகிய பயனைத் தரும்.

குறிப்பு:—பக்திமார்க்கிகள் பகவானை உபாஸிக்க வழிபாட்டு நெறியாக வேதத்தில் முப்பத்திரண்டு வித்தைகள் கூறப்பட்டிருக்கின்றன. அவைகளில் ஒன்றுபோல் இத்திருவாய்மொழியும் அமையும் என்பது கருத்து. அல்லது இத் திருவாய்மொழியே சுவயம் பிரயோஜநமாகக் கூடுமென்றும் உரைக்கலாம்.

பகவான் தன் மகா ஔதாரியத்தால் பக்தர்களுக்கு அவ்வவர்களின் கர்மபரிபக்குவகாலத்தில் தன்னோடு கலவியைக் கொடுத்து அவர்களுக்குச் சந்தோஷத்தைத் தக்ககாலத்தில் விளைவிப்பான்'-என்று இந்தத் தசகத்தில் ஆழ்வார் கற்பிக்கிறார்.

திருவாய்மொழியின் முதல்பத்தி லடங்கிய நூறு பாட்டுக்களில் ஸ்ரீயப்பதி,ஸேவிக்கவும் பூஜிக்கவும்வழிபடவும் மோக்ஷோபாயமென்று மகாநுபாவனை ஆழ்வார் கற்பிக்கிறார். இதன் பாகுபாடுகளான முதல் பத்துத் தசகங்களின் இலக்கை ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் கீழ்வருமாறு ஸங்கிரஹிக்கிறதை ஸம்ஸ்கிருதத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்துத் தருவோம். அவையாவன:—

முதல் திருவாய்மொழியில், எம்பெருமான் ஸ்வரூபம் குணம் ரூபம் விபவம் இவைகளால் ஸர்வோத்கிருஷ்டனுகையாலே ஸர்வபரமன் என்று காட்டுகின்றார்.

2-ம் திருவாய்மொழியில் பகவத் அநுபவத்தை அடையப் பக்தி எல்லாருக்கும் அவசியமானதால்

தேவதைகளின் பக்தியை மாத்திரமல்லாமல் ஸர்வ மனுஷியர்களின் பக்தியையும் எம்பெருமான் சமபுத்தியால் ஏற்பானென்றும், ஆகையால் பக்தியோகத்தால் எல்லாரும் உஜ்ஜிவியுங்கோளென்றும் கற்பிக்கிறார்.

3-ம் திருவாய்மொழியில், அவன் தன் பக்தஜனங்களாலே கட்டுண்ணப்படும்படி எளியனாயிருப்பதாலே எவ்வித பக்தர்களாலும் எய்துதற் கெளியவனென்று கற்பிக்கிறார்.

4-ம் திருவாய்மொழியில், பகவான் ஸர்வக்ஞனாயிருந்தும் ஆச்ரிதர்களின் அபராதங்களைக் கருத்துட்கொள்ளாமல் ஸஹிக்கிறவன் என்கிறார்.

5-ம் திருவாய்மொழியில், எம்பெருமான் அபார காருண்யத்தாலே தனது உத்கிருஷ்டத்தைப் பாராதே ஸௌசீல்யத்தால் பக்தர்களுடன் ஒரு நீராகக் கலக்கும் சுலபன் என்கிறார்.

6-ம் திருவாய்மொழியில், அவனுக்குப் பூஜைவழிபாடுகள்செய்ய உபகரண ஸமர்த்தி தேடவேண்டாமென்றும், தேகசிரமம் திரவியவிரயம் முதலிய இடர்ப்பாடில்லாமல் கைக்கு அகப்படும் புஷ்பம் புகை நன்னீர் கொண்டு பூஜைசெய்தால் அதையே உகப்பாக ஏற்பானென்றுங் கற்பிக்கிறார்.

7-ம திருவாய்மொழியில், எம்பெருமான் "வைப்பாம் மருந்தாம்" என்பதாலே, ஆபத்துக்காலத்தில் உதவும்பொருட்டுத் தேடிவைக்கும் பொருள்போல், பக்தர்கள் தங்களிஷ்டப்படியெல்லாம் அவனை அநுபவிக்கக் கூடியவனுகையாலே அவனை வழிப்படுதல் அமிர்தம்போல் ஸாஸமாயிருக்குமென்று கற்பிக்கிறார்.

8-ம் திருவாய்மொழியில், எம்பெருமான் ஆச்ரிதர் அபேக்ஷைப்படி அவர்களுடன் உண்மையாய் ஒரு நீராகக் கலக்கும் சுபாவமுடையவன் என்கிறார்.

9-ம் திருவாய்மொழியில், பகவான் தன் நன்னலத்தின் பூர்வாநுபவம் ஷித்திக்கஷித்திக்கப் பின்னநுபவம் கொடுத்து ஆற்றுவிக்கும் சுகாநுபவமான போகத்தை விளைவிப்பவன் என்கிறார்.

10-ம் திருவாய்மொழியில், இலகுவான உபாயத்தால் பெறும் பேறாகிய தன்னையே மஹா ஔதாரியத்தால் ஆத்மதானமாய்த் தந்தருளும் தன்மையன் எம்பிரான், என்கிறார்.

இப்படி மஹாகுணங்களாலேயும் அதிக உத்கர்ஷத்தாலும் விளங்கும் பரமன் ஸேவிக்கத்தக்க பரம்பொருளாய்த் தன் பக்தர்களுக்கு மோக்ஷத்தைக் கொடுப்பானென்று உபதேசித்தார்.

இனி இரண்டாம் பத்தில், அடையும்பொருள் அவனாகவே உளனென்றும், அவனே இன்பவெள்ளம் என்றும், பத்துத் திருவாய்மொழிகளால் கற்பிக்கப் போகிறார்.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

மானத சாத்திரம்

[PSYCHOLOGY]

[627-வது பக்கத் தொடர்ச்சி]

(நடத்தை - Behaviour)

சிற்றாராய்ச்சி:—இவ்வாறு முடிவுகட்டுவதுதானே அறிவாராய்ச்சியின் தொடக்கம். முற்றிய அறிவாராய்ச்சியில் மனக்காட்சியும் சொற்களும் பெரிதும் பயன்படுகின்றன. எனினும், உணர்விலுங்கூட ஆராய்ச்சி காணக்கிடக்கின்றது. அஃது இளவாராய்ச்சியாகும்; சிற்றாராய்ச்சியாகும். தற்காலத்தின் நோக்கத்திற்குப் பொருத்தமான ஒரு தன்மையைக் காட்சிப்பொருளில் ஆராய்ந்து கண்டுணர்ந்து அத்தூண்டற்கேற்கத் துலங்கல் அன்றோ ஆராய்ச்சியின் சிறப்பாய இயல்பு. குளவி கூழாங்கல்லைக்கண்டது; தன் குழியை மூடித் தட்டையாக்க வேண்டிற்று; அதற்குப்பொருத்தமாய் உதவுந் தன்மை அக்கூழாங்கல்லிற் கண்டது ; அதனை எடுத்துத் திமிசாகப் பயன்படுத்திக்கொண்டது. குரங்கின் எதிரே கைக்கெட்டாத தூலையில் முந்திரிக்கொட்டைகள் இறைந்து கிடக்கின்றன. அக்குரங்கை ஒரு தறியில் கட்டிவைத்திருக்கிறார்கள். ஆனால் அதன் அருகே கொம்பும் கயிறும் கோணியும் இருக்கின்றன. கோணியை எடுத்து அக்கொட்டைகள் மீது எறிந்து வலித்திழுத்துச் சில கொட்டைகளைப்பெறுகிறது. கயிற்றை வளைவாக எறிந்து சில கொட்டைகளை இழுக்கிறது. தூலையில் உள்ளவற்றை நீண்ட கொம்பைக்கொண்டு தனக்கருகில் தள்ளிக் கொள்கிறது. கோணியும் கொம்பும் கயிறும் என்ற பலதிறப்பட்ட பொருள்களைக்கண்டு, தான் வேண்டும் கொட்டைகளைப் பற்றியிழுக்கும் பொதுத்தன்மையை அவ்வேற்றுமையிடை யுணர்ந்து அதற்கேற்றபடி இயங்கி அவற்றைப் பயன்படுத்திக்கொண்டதன்றோ? இச்சிற்றாராய்ச்சி குரங்குகளிடை இங்ஙனம் விளக்கமாகக் காணப்படுகின்றது.

மனக்காட்சி:—ஐம்பொறிகள் அறியும் பொருள்களைக் காட்சிப்பொருள் என்றும், ஐம்பொறியால் அன்றி மனத்தால் அறியும் பொருள்களைக் கருத்துப்பொருள் என்றும், நச்சினார்க்கினியர் வேறுபிரிக்கின்றார். புலனாகும் பொருள்கள் புலப்பொருள்கள். எதிர் நில்லாது சேய்மைக்கண் நின்றபொருள் புலனில்பொருள். புலனில் பொருள்களைப்பற்றி விலங்குகள் நினைத்து நடக்கின்றனவா? புலனில்பொருளைக் கருத்துப்பொருளாக உயர்நிலையடைந்த விலங்குகள் காண்கின்றன. ஈதே மனக்காட்சி (Imagination) யாம். தன் வீட்டையோ கூட்டையோ நோக்கிச்செல்கின்ற உயிருளி வீட்டையோ கூட்டையோ மனக்காட்சியால் காண்கிறதென்று சொல்லவேண்டாமா. நேற்றுச் சேய்மையிற் புதைத்துவைத்த என்புத்துண்டை இன்றுகாலையில் விழித்தெழுந்ததும் நாடிச்செல்லும் நாய் புலனில் பொருளாம் அவ்வெலும்பைக் கருத்துப்பொருளாக மனக்கண்ணால் கண்டு அதற்குத் தக இயங்குகிறதன்றோ? புலனில்பொருளைப்பற்றி மனம் பதைபதைப்பதே அவாவாகும் (Desire). இவ்வாறு புலனில் பொருள்களை மனக்கண்ணால் காண்பது, அப்பொருள்

களை அதற்குமுன்னர்ப் புலப்பொருள்களாகக் கண்டு பன்முறைபயின்று பழமை பாராட்டியதால் நிகழ்கின்றது. ஆனால் இத்தன்மை இயற்கையமைப்பாகவும் காணக்கிடக்கின்றது. இதற்குமுன்னர்க் கூடுகட்டாத சிலந்தியும் தூக்கணங்குருவியும் வேலைத்திற மமைந்த கூடுகளைக் கட்டுவது எங்ஙனம்? காட்சிப்பொருளாக முன்னர்க் காணாத அக்கூட்டை மனக்கண்ணால் கருத்துப் பொருளாகக் காணும் தன்மை சிலந்திக்கும் தூக்கணங்குருவிக்கும் இயல்பாக அமைந்துகிடக்கின்றது எனல்வேண்டும்.

உயிருளிகளின் ஒற்றுமை:—இதுவரையும் நடத்தையின் புறநிலையை ஆராய்ந்துவந்தோம். உலகமலர்ச்சிமுறையின் தொடர்ச்சியைக் கண்டோம். நிலைக்குத் தக்கவாறு மாறியியங்கும் அறிவுச் செயலினைக் கீழ்நிலை யுயிருளியாகிய மாறனிடமும் கண்டோம். விலங்கு பறவை என்ற இவற்றின் சிறப்பியல்பாகக் கருதப்பட்ட இயற்கைச்செயனிலையே உயிருளிகளை இயக்கிவைப்பதெனக் கண்டோம். மக்களையும் இயற்கைச்செயனிலையே இயக்கிவைக்கின்றதெனக் கண்டோம். பலவகைநிலையிலும் ஒரு பொருளே பலவகை மெய்ப்பாட்டை எழுப்பிநிற்பதால் அப்பொருளைப் பற்றியவை அனைத்தும் ஒன்றாக இயைந்து மக்களிடைச்சுவை நிலையாகின்றன (Sentiments). அப்பொருளைப் பற்றியஅளவில் அவர்களது மனநிலை அச் சுவை நிலையேயாம். ஒரு மலையறைக்குள் போகின்றான் ஒருவன். விடுப்பம் என்ற இயற்கைச்செயனிலை அவனை உள்ளே உந்துகின்றது. 'உள்ளேஎன்ன உள்ளது' என அறியவிரும்புகின்றான். சிறிதளவுசென்றதும் இருட்டிவிடுகின்றது; சலசலஎன்ற ஒலிகேட்கின்றது. அஞ்சித் திரும்புகின்றான். ஒன்றும் நிகழாமையால் மறுபடியும் விடுப்பத்தால் உந்தப்பட்டு முன்செல்கின்றான். குளிர்ந்த ஊற்றொன்றைக்கண்டு நீர்வேட்கை தணிய இனிய தண்ணீரை உள்ளங்குளிரக் குடிக்கின்றான். தனக்குவேண்டிய தண்ணீரைக் கடவுளே கொடுத்தார் என்று தன்னடக்கம் மீதூர வணங்கிநிற்கின்றான். அன்புங் கொள்கின்றான். செய்ந்நன்றி மறவாது வாழ்த்துகின்றான். பின்னர் அம்மலையை நினைக்குந்தோறும், அச்சமும் மருட்கையும் அன்பும் தன்னடக்கமும் ஒன்றாக இயைந்து கடவுளன்பு என்னும் சுவைநிலை யாகின்றன. மக்கள் இத்தகைய சுவைநிலை பல உடையாராய் விளங்குகின்றனர். அவாவும் மனக்காட்சியும் மக்களிடை உயர்நிலையடைகின்றன. விலங்குகளோ பொதுவாகப் புலப்பொருள்களைக் கண்டு இயங்குகின்றன; புலப்பொருள் மறைந்ததும் தம் செயலை நிறுத்திக்கொள்கின்றன. ஆனால், மக்களோ மனக்காட்சியால் கருத்துப்பொருள்களைக்கண்டு அவாவி, அதனை அடையும் சூழ்ச்சியையும் மனக்காட்சியால் கண்டு ஒரு திட்டத்தை ஏற்படுத்திக்கொண்டு அதன்படியே முடியும்வரை தொடர்ந்து விடாமுயற்சியோடு உழைக்கின்றனர். இவ்வாறு சூழ்ச்சிசெய்வதும் திட்டம் அமைப்பதும் விலங்குகளிடம் இல்லை எனலாம். ஆனால் அறிவாராய்ச்சியும்முன்கண்டபடி சிறிதளவேனும் விலங்குகளிடம் விளங்கவில்லையா? மக்களது ஒழுக்கமும் (Conduct), பண்பும் (Character) முடிவில் இயற்கைச்செயனிலையாகத் தானே முடிகின்றன. ஒன்றுக்கும் அஞ்சாது, ஒரு சிறுவனைப்பகைவரிடமிருந்து காப்பவனைத் தறுகணாளன் எனப் புகழ்கின்றோம். தறுகண்ணண்மை என்ற பண்புச்சொல் லுண்மையால், அப்பொருள் ஒன்று உண்டென அதனை மெச்சுகின்றோம். ஏழைகள் பலருக்கும் தன்பொருளைத் தந்து உதவுகின்றான் ஒருவன்; ஈகை என்ற பெயர்ச்சொல் உண்மையால் அதனையும் மக்கள் பண்பெனப் புகழ்கின்றோம். பெயர்ச்சொற்கள் வழங்கிவருவதனாலேயே அதற்கேற்ற பொருளும் உண்டென நாம் மயங்கி உணர்கின்றோம். ஒருவன் துயில்கின்றான்; "தூக்கத்தால் துயில்கின்றான்; அல்லது துயின்மையால் தூங்குகின்றான்" என்று சொல்லுவதுபோலாகும் ஈகையையும் தறுகண்ணண்மையையும் நமது செயல்களுக்கு முதற்கருவிகளாகக் கொள்வது. ஈதற் செய்கையை ஈகை என்ற பண்புச்சொல் கொண்டும், தறுகண் செயலைத் தறுகண்ணண்மை என்ற பண்புச்சொல் கொண்டும் திருப்பிச்சொன்னால் என்ன விளக்கம் ஏற்படும். வேறொரு சொல்கொண்டு விளக்கினால் பொருளையேனும் உணரலாம். அப்பயனையும் இங்கு அடைய முடியவில்லை யன்றோ? ஈதல் என்பது அச்சத்தாலும் தன்னெடுப்பாலும், பேணும் இரக்கத்தாலும், எழுவதை முன்னர்க் கண்டோம். ஆகையால் ஈகை என்ற பண்புச்சொல்லை உணர்ந்து பயனில்லை. ஒருவனுடைய உள்ளக்குறிப்பைத் தெரிந்துகொள்ளவேண்டும். அவ்வுள்ளக்குறிப்போ இயற்கைச்செயனிலையையும்மெய்ப்பாட்டையும் குறிக்கின்றது. ஆதலின் விலங்குகளினிடை காணப்படும் இயற்கைச்செயனிலையே மக்களின் சிறப்பியல்பாகிய ஒழுக்கத்தையும் பண்பினையும் திருத்தி யுருப்படுத்துகின்றது என்பதாயிற்று. மேலே மரபாகி மக்களிடைப் பயின்றுவருகின்ற கொள்கைகளும், சுவைநிலைகளும், பேச்சும், நம்முடையனவாகி நம்மை உயர்த்துகின்றன. ஆனால் இவை நாளடைவில் வளர்ந்தவையாகும். முதல் தலைமுறையில்மக்கள்எனப் பிரித்துப் பேச்சாகப் பேசியிருக்கமாட்டார்கள். அவர்களுக்கு மரபென ஒன் றெங்கிருந்து வந்திருக்கும்? எனவே உள்ளம் என்பது உயிருளிகளிடை எல்லாம் ஒருதன்மையாய் விளங்கி உயிருளிகளின் உயர்நிலைக்கேற்ப உயர்நிலை யடைந்துகொண்டேவருகிறது என்பது தெளிவாகின்றது. புறநிலையாராய்ச்சி இதனோடு ஒருவாறு முடிகின்றது. மேற்சென்று உண்ணோக்காக நடத்தையின் இயல்பைக் காணுதல் வேண்டும்.

ஒட்டக்கூத்தர் பாடிய

தக்கயாகப் பரணி

மகாமகோபாத்தியாய உ. வே. சுவாமிநாத ஐயர் பதிப்பு.

(உரையுடன்)

இதுவரையில் அச்சேறாத இவ்வரியநூல் இப்பொழுதே வெளிவந்துளது. விலை ரூ. 4—0—0. வி. பி. செலவு வேறு.

விலாசம் :—கலாநிலயம் : 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

தமிழ்ப் பாடம் 134.

[631-வது பக்கத் தொடர்ச்சி]

நைடதம்—நளன் தூதுப் படலம்

முற்றிழை வனமுலை முயங்கு நன்னலம்
பெற்றில னெனினும்வேள் பெய்யும் வாளியான்
மற்றுயி ரிறப்பினும் வான வேந்தொடு
சொற்றது மறக்கில னென்று சொல்லுவான். 27.

(உரை). முற்று - முற்றிய, இழை - ஆபரணங்களையணிந்த, வனம் - அழகிய, முலை - தமயந்தியின் முலைகளை, முயங்கும் - தழுவுகின்ற, நல் நலம் - நல்ல பாக்கியத்தை, பெற்றிலன் எனினும் - நான் பெறுதவனாயினும்; வேள் பெய்யும் வாளியால் - மன்மதன் சொரியும் அம்புகளால், (மற்று - அசை), உயிர் இறப்பினும் - என் ஆவி நீங்கினாலும், வானவேந்தொடு - இந்திரனுடன், சொற்றது - சொன்னது, மறக்கிலன்- நான் தவறமாட்டேன், என்று - என்று நிச்சயம் செய்துகொண்டு, சொல்லுவான் - (இந்திரனை நோக்கிப் பின்வருமாறு நளன்) கூறுவான்.

குறிப்பு:—சொன்னது, என்பது வலித்தல்விகாரத்தால் சொற்றது என ஆயிற்று.

எப்பொரு ளாயினும் யாவ ருள்ளமுங்
கைப்படு நெல்லியங் கனியிற் காணுநீர்
துப்பிதழ் மடந்தைபாற் றூது போகெனச்
செப்பிய தெவன்கொ லெஞ்சிந்தை யோர்ந்துமே. 28.

(உரை). எப்பொருள் ஆயினும் - எந்தப் பொருளையும், யாவர் உள்ளமும் - எவ்வெவர் மனத்தில் இருப்பவைகளையும், கைப்படு நெல்லி அம் கனியில் - உள்ளங்கை நெல்லிக்கனிபோல், காணும் நீர் - காணவல்ல நீங்கள், எம் சிந்தை - நானும் தமயந்தியும் ஒருவரை ஒருவர் காதலித்திருக்கின்றோம் என்னும் எங்கள் இருவருடைய கருத்தையும், ஓர்ந்தும் - அறிந்திருந்தும், (பிறகு என்னையே) துப்பு இதழ்மடந்தைபால் - பவளம் போன்ற உதடுகளையுடைய அத் தமயந்தியினிடத்தில், தூது போக என - தூது போகும்படி, செப்பியது எவன் கொலோ - சொன்னது ஏனோ!

விரிவுரை:—"எல்லாருள்ளமும் அறியவல்ல நீர், எம்மிருவருடைய மனநிலையையும் அறிந்திருந்தும் என்னையே அவள்பால் தூது போக்குமிது எக்கருத்தாலோ அறிகிலேன்", என்கின்றான் நளன். "இது தகவோ உமக்கு" என்ற நிந்தையும் இதனில் அடங்கியிருக்கின்றதெனக் கொள்ளின் அது நளனுடைய குணத்திற்குக் குறைவாகும்.

குறிப்பு:—'எவன்' என்பதற்கு இங்கு 'யார்' என்னும் பொருள் இல்லை. 'எவன்' என்றால் எது அல்லது ஏன் என்னும் பொருளும் இருக்கின்றது. உண்மையில், 'எவன்' என்னுஞ் சொல்தான் 'என்' என்று குறுகி வரலாகின்றது.

வழங்கிய நும்முரை மறாது சென்றியான்
மொழிந்தன னாயினு முன்ன ரேயெனை
விழைந்தவத் தளிரியல் வெள்கு றாதுளங்
குழைந்துநும் பான்மணம் பொருந்தல் கூடுமோ. 29.

(உரை). வழங்கிய - சொன்ன இந்த, நும் உரை - உங்கள் வார்த்தையை, மறாது - மறுக்காமல், யான் - நான், சென்று - தமயந்தியினிடம் போய், மொழிந்தனன் ஆயினும் - சென்னேனானாலும், முன்னரே - முன்னமே, எனை - என்னை, விழைந்த - காதலித்திருக்கின்ற, அத் தளிர் இயல் - தளிர்போன்ற மெல்லிய தன்மையை உடைய அந்தத் தமயந்தி, வெள்குறாது-நாணமின்றி, உளம் குழைந்து-மனம் தளர்ந்து, நும்பால் மணம் பொருந்தல் கூடுமோ - மணம் செய்துகொண்டு உங்களோடு பொருந்தி யிருப்பதென்பது இயலுமோ, (என்று நளன் மேலும் கூறினான்).

விரிவுரை:—"என்னையே முன்னர்க் காதலித்துள தமயந்தி உங்களை விரும்பி மணங்கொள்வது அமையாதாதலின் இத்தூது பயனின்றிப்போம்" என்னும் நளனது இவ்வுரையில், "ஆதலின் இதனை விடுமின்" என்னுங் குறிப்பு அடங்கியுளதுபோலும்.

குறிப்பு:—சென்று + யான் = சென்றியான், நிலைமொழியீற்றில் குற்றியலுகரம் இருக்க வருமொழி முதலில் யகரம் வந்ததால் குற்றியலிகரம் தோன்றியது.

தளிரியல் - உவமத்தொகைப் புறத்துப்பிறந்த அன் மொழித்தொகை.

என்னவேந் துரைத்தலு மிசைத்த சொன்மறா
நின்னைமெய்ப் பரதனை நிகரில் பார்த்தனை
முன்னினு நினைத்தவை யனைத்து முற்றுமா
லன்னநீ யேகிலே தரிய தாகுமே. 30.

(உரை). என்ன - என்று, வேந்து உரைத்தலும் - நளவேந்தன் சொன்னதும், (இந்திரன்), "இசைத்த சொல் மறா நின்னை - சொன்ன சொல்லை மறக்காத உன்னையும், மெய்ப் பரதனை - உண்மையையுடைய பரதனையும், நிகரில்பார்த்தனை-ஒப்பில்லாத அர்ச்சுனனையும், முன்னினும் - மனத்தால்நினைத்தாலும், நினைத்தவை அனைத்தும் முற்றும்-எண்ணிய காரியம் எல்லாம் கைகூடும். (அப்படியிருக்க) அன்ன நீ - அவர்களில் ஒருவனான நீயே, ஏகில் - போனால், ஏது அரியது ஆகும் - எந்தக் காரியந்தான் முடியாமல் போகும்? (ஆகையால் ஐயமின்றிச் செல் என்று இந்திரன் கூறினான்).

விரிவுரை:—கருமங் கைகூட லியலாதென்று இயம்பிய நளனிற்கு இந்திரன் உரைத்த உத்தரம் இது. எவ்வகை இடையூறிருப்பினும், பார்த்தன் பரதன் நளன் ஆகிய இம்மூவரையும் மனத்தில் நினைத்துக் கொண்டு ஆரம்பித்தால் காரியம் கைகூடாது போகாது என்பது சாஸ்திரம். நளனை நினைத்தவர்களுக்கே காரியம் கை கூடுமெனில் அவனே செல்கின்றகாரியம் கைகூடித்தான் தீரவேண்டுமென்பது பின்னும் நிச்சயமாகின்றது. இவ்வாறு நளனை நினைத்தாலே நிச்சயம், அதனிலும் நிச்சயம் அந்நளனே சென்றக்கால் என அமைந்திருப்பது மேன்மேலுயர்ச்சியணி (2—693).

ஆனால் இந்த நிச்சயமெல்லாம் பழுதாய் முடிந்தது. நளனே சென்றும் தமயந்தி அமரரை மணக்க இசையவில்லை. ஆயின் சாத்திரம் பொய்த்ததோ, வேறுதான் ஓர் பிழையுண்டோ! உண்மையாதெனில் சாஸ்திரத்

தில் குறித்தவன் நிடதநாட்டு அரசனாகிய இந்த நளன் அல்லன். கடக்கரிய நெடுங்கடலைக் கடத்தற்கு அணை யிட்டுச் சீதையை இராமன்பால் எய்துவித்த வானரத் தலைவனாகிய நளனை நினைத்துச் செய்வார் கருமமே முற் றும். ஈதுணராத இந்திரன், பெயரின் ஒற்றுமையால் மயங்கினன். வானரவீரன் நளனை நினைக்கவேண்டியது போக நிடதநாட்டரசனையே செலுத்தினாலும் என்ன பயன். 'நளனையே அனுப்பும்போது நமக்கென்ன குறை' என்ற துணிவினால் மற்றிருவராய பார்த்தனை யும் பரதனையுங்கூட மனத்தால் வழுத்தித் தொழுது நினைத்திலர் போலும் அத்தேவர். எனின், தமயந்தி மணம்பொருந்த இசையாததும் வியப்பாமோ.

இங்குக்குறித்துள பார்த்தன் பாண்டவர்களுள் ஒருவனாய அர்ச்சுனன் அல்லன். கார்த்தவீர்யார்ச்சுனனாவான். பரதனும், சகுந்தலையின் புத்திரனாகிய பரதனேயன்றித் தயரதன் மைந்தனல்லன்.

இதன்மேல் நளன் தூதிற் கிசைந்தான். ஆயினும், "காவலாளர் காணாது கன்னிமாடத்துட்சென்று தமயந் தியைக்கண்டு யான் பேசுவது எங்ஙனம்" என்று நளன் வினவ, பிறர்கண்களுக்குத் தென்படாமல் செல்ல வல்ல "மாலிகாஞ்சனம்" என்னும் மந்திரத்தை இந்தி ரன், அவனுக்குக் கற்பித்து அனுப்பினன். நளனும் ஏகித் தமயந்திவாழ் குண்டினபுரத்தைச் சேர்ந்தனன்.

இலக்கணம்.

c. மகரமெய்யீறு (தொடர்ச்சி)

II மகரமெய்யீறு + இடையின மெய்ம்முதல்.

இடையின மெய்களில் மொழிக்கு முதலில்வருவன யகரம் வகரம் ஆகிய இரண்டே.

வருமொழிமுதலில் யகர வகர மெய்கள்வர, நிலைமொழி யீற்று மகரமெய் சில தொடர்களில் கெட்டும் சில தொடர்களில் கெடாமலும் புணரும். எத்தொடர் களில் கெடும், எத்தொடர்களில் கெடாது எனின்— வருமொழிமுதலில் உயிர்வர, மரம் + அடி = மரவடி எனக்கெடுகின்ற தொடர்களிலெல்லாம் (2—673) இடையினம் வரினும் நிலைமொழி யீற்று மகரமெய் கெடுமென்றும், மற்றத் தொடர்களில் கெடாதென் றும் கொள்ளவேண்டும். அதன்படி,

(a) பின்வருந் தொடர்களில் நிலைமொழியீற்று மகர மெய் வருமொழிமுதலில் யகர வகரங்கள் வரக் கெடும்.

1. ஆறும்வேற்றுமைத் தொகை.

சைந்நியம் + யானை = சைந்நிய யானை
மரம் + வேர் = மரவேர்
முகம் + வடிவு = முகவடிவு.

குறிப்பு:— (i) நிலைமொழி வினையாலணையும்பெயரா யிருக்குமாயின், வருமொழிமுதலில் யகர வகரங் கள் வர 6-ம் வேற்றுமைத்தொகையினும் நிலைமொழி யீற்று மகரமெய் கெடாது.

சிறியேம் + வாழ்வு = சிறியேம் வாழ்வு
அடியேம் + வினை = அடியேம்வினை
வெல்வேம் + யானை = வெல்வேம்யானை
(வெல்வேமாகிய எங்களுடைய யானை)

(ii) நிலைமொழி, குறிலொடுசேர்ந்த மகரமெய்யை யீற்றிலுடைய இரண்டெழுத்துச் சொல்லாயின், வரு மொழிமுதலில் யகர வகரங்கள் வர, ஆறும் வேற்று மைத் தொகையினும் நிலைமொழியீற்று மகரமெய் கெடாது:—

எம் + யானை = எம்யானை
நும் + வீடு = நும்வீடு
தம் + வடிவு = தம்வடிவு
நம் + வேழம் = நம்வேழம்

2. மற்ற வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகைகளில் மகரமெய் கெடும்.

மரம் + வாள் = மரவாள் (மரத்தை அறுக்கும் வாள்) 2-ம் வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகை.

மரம் + யாழ் = மரயாழ் (மரத்தால் செய்த யாழ்) 3-ம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

குலம் + வண்மை = குலவண்மை (குலத்திற்கு உரிய வண்மை) 4-ம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

பட்டினம் + வண்டி = பட்டின வண்டி (பட்டி னத்திலிருந்து வருகின்ற வண்டி) 5-ம் வேற் றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகை.

வனம் + யானை = வனயானை (வனத்தில் வசிக் கின்றயானை) 7-ம் வேற்றுமை உருபும்பய னும் உடன்தொக்க தொகை.

3. பண்புத் தொகை:—

சிங்கம் + விலங்கு = சிங்கவிலங்கு (சிங்க மாகிய விலங்கு) ஐராவதம் + யானை = ஐரா வதயானை.

4. உவமத் தொகை.

பவளம் + வாய் = பவளவாய்
பதுமம் + விழி = பதுமவிழி

(b) பின்வரும் தொடர்களில், நிலைமொழி யீற்றி லுள்ள மகரமெய், வருமொழி முதலில் யகர வகரங் கள் வர, கெடாமல் இயல்பாயிருக்கும்:—

குலம் + யாது = குலம்யாது—எழுவாய்த்தொடர்.
வெல்லும் + வீரன் = வெல்லும்வீரன் = பெயரெச்சத் [தொடர்.
ஓடும் + யானை = ஓடும்யானை—வினைமுற்றுத் தொடர்.
அழைத்தாலும் + வாரான் = அழைத்தாலும் வாரான் - [வினையெச்சத் தொடர்.
புலியும் + யானையும் = புலியும் யானையும் - இடைச் [சொற்றொடர்.
நிலம் + வாங்கினன் = நிலம் வாங்கினன், 2-ம் வேற்று [மைத் தொகை.
குலம் + வரும் (பெருமை) = குலம்வரும் (பெருமை) குலத்தால் வரும் பெருமை, 3-ம் வேற்று [மைத் தொகை.
சுந்திரம் + வங்கணன் (இவன்) = சுந்திரம் வங்க ணன், (சுந்திரம் என்பவனுக்கு வங்கணன் இவன், வங்கணன் = காதலன்), 4-ம் வேற்று மைத் தொகை.
நகரம் + விலகினன் = நகரம் விலகினன் (நகரத்தி லிருந்து விலகினன். 5-ம் வேற்றுமைத் தொகை.
நிலம் + வீழ்ந்தான் = நிலம் வீழ்ந்தான் (நிலத்தில் வீழ்ந்தான்) 7-ம் வேற்றுமைத் தொகை.

குளம் + வயல் = குளம்வயல் (குளமும் வயலும்) உம் மைத்தொகை.

குறிப்பு:—ஈற்று மகரமெய் கெடுவதும் கெடாததும் பெரும்பான்மை இவ்விதிகளுக்கு அடங்கி நிகழ்கின் றன. ஒரோவழி ஒன்றிரண்டு இவைகளுக்கு மாறாக வழங்கினும் வழங்கலாம். எனினும், அதனால் இவ்விதி களுக்குக் குறைவில்லை. அவைகளும் பொருள் மயங் கக்கூடிய தொடர்களாகவே யிருக்கும். நிலவிலை, என் னுந் தொடர் நிலத்திற்கு விலை என நான்காம் வேற்று மையாக விரியலாம். ஆயின் மகரமெய் கெடலாகாது. எனினும் நிலத்தினுடைய விலை என ஆறும்வேற் றுமையாகவும் விரியலாம். ஆதலின், நிலம் + விலை, நிலம் விலை என இயல்பாய்ப் புணராமல் நிலவிலை என நிலை மொழி யீற்று மகரமெய் கெட்டே புணர்கின்றது.

குறிப்பு:—நிலைமொழி யீற்று மகரமெய் கெடாமல் புணர்கின்ற தொடர்களில், வருமொழி முதலில் யக ரம் வர, அம் மகரமெய் இயல்பாய் நிற்பதுடன் முன் உரைத்த (3-534) விதிப்படி இகரந் தோன்றினுந் தோன்றலாம்.

நம் + யானை = நம்யானை, நம்மியானை [தேமியாம்
தொழுதேம் + யாம் = தொழுதேம்யாம், தொழு
குலம் + யாது = குலம்யாது, குலமியாது.

இவ்வண்ணம் இகரந் தோன்றிப் புணர்வது பெரும் பாலும் செய்யுள்களில் காணப்படுகின்றது.

குறுந்தொகை

[635-வது பக்கத் தொடர்ச்சி]

பாலைபாடியபெருங்கடுங்கோ] 124 [பாலை

தலைமகன் பிரியலுற்றதை உணர்ந்து, 'என்னையும் உடன் கொண்டு சென்மின்' என்ற தலைமகட்குத் தான் செல்லுங் காட்டினது கொடுமை கூறித் தன்னுடன் அவள் வருதலைத் தலைமகன் தவிர்த்தபோது அவள் கூறியது.

உமணர்,
சேர்ந்து கழித்த மருங்கி னகன்றலை
உளர்பாழ்த் தன்ன ஓமையம் பெருங்கா
டின்னா என்றி ராயின்
இனியவோ, பெரும, தமியோர்க்கு மனையே.

(உரை). உப்புவிற்பார் சென்றடைந்து தங்கிப் பின் நீங் கியபோது (அவர் தங்கிய) இடமகன்ற ஊர் (உப்புவாங்குவ தற்கு வந்துகூடிய சனக்கூட்டமொழிந்து) பாழ்த்துப் போனாற் போன்ற, வாகைமரஞ் செறிந்த பெருஞ் சுரத்துப் போதல் துன்பம் தருவதாகும் என்று தாம் சொல்லுகிறீ ராயின், பெருந்தகாய், காதலரைப் பிரிந்து தனித்துறையும் மகளிருக்கு மனைக்கண் இருத்தல் இனியதோ? சொல்வீராக.

உமணர் - உப்புவாணிகர். கழிந்தமருங்கின்- கழிந்தகாலை, கழிந்தபோது; 'மருங்கு' என்பது இங்கே இடத்தைக் குறிக்காது காலத்தை உணர்த்திநின்றது. ஓமை - வாகை மரம்; பாலைக்குரியது. காதலனுடன்செல்வதால் காடும் இனி தாம், தனித்துறைவதால் மனையும் இன்னாதாம், என்னுங் குறிப்புத்தோன்ற, 'இனியவோமனையே' என்றாள். (காடு, மனை, இரண்டையும் பன்மையாக்கொண்டு 'காடு இன்னா' 'மனை இனிய' என்பதைக்காட்டிலும், 'இன்னாதென்றி' 'இனியதோ' என்று பாடந்திரித்துக்கொள்ளலே நேர்.)

இது, காட்டினது கொடுமைகூறித் தலைமகள் உடன்வரு தலை மறுத்துத் தனியே பிரியலுற்றதலைமகனுக்குத் தோழி 'காதலனுடன் செல்வாளுக்குக் காடே இனியது; காத லனைப்பிரிந்து தனித்துறைவாளுக்கு மனையே மிகவும் இன் னாதது' என்று கூறி அவனைச் செலவழுங்குவித்ததுமாம்.

அம்மூவனார்] 125 [நெய்தல்

அலரெழுதலைத் தோழியாலுணர்ந்து ஒருவழித்தணந்த தலைமகன் பிரிவு நீட்டித்தவழித் தோழிக்குத் தலைவி தன தாற்றாமை தோன்றக் கூறியது.

இலங்குவளை நெகிழச் சாஅய் யானே
உளெனே, வாழி தோழி; சாரல்
தழையணி யல்குன் மகளி ருள்ளும்
விழவுமேம் பட்டவென் னலனே பழவிற்
பறைவலர் தப்பிய பைத லாரை
திரைதோய் வாங்குசினை யிருக்கும்
தண்ணந் துறைவனொடு கண்மா றின்றே.

(உரை). தோழீ, விளங்கும் வளையல்கள் கையினின்று கழன்றுவிழும்படி (உடல்)மெலிந்து யான்மட்டுமே (இங்கே) உள்ளேனாயினேன்; மலைச்சாரலினிடத்துள்ள (நறுந்)தழை களை (ஆடையாக அரையில்) உடுத்த அல்குலையுடைய (குற) மகளிர்தம்முள் (கண்டார் கண்ணுக்கு) விழாவைக் கண்டாற்போல இன்பத்தை அளித்தலிற்சிறந்த எனது எழினலமெல்லாம், ஒள்ளிய சிறகின் பழைய வலிமை கெட்ட துயரத்தையுடைய நாரை அலையிற் படியும்படி வளைந்த மரக்கிளையில் (இரையை எதிர்பார்த்துத்) தங்கும் குளிர்ந்த, அழகிய நீர்த்துறைகளையுடைய நெய்தனிலத் தலைவனோடு, (என்னைவிட்டு) அங்கே சென்று ஒழிந்தன.

சாஅய் - (வினையெச்சம்) சாய்ந்து, மெலிந்து. யானே, 'ஏ' பிரிநிலை ஏகாரம். அல்குல் - ஆடவர் அல்லது மகளிருடைய இடைக்குக்கீழுந் துடைக்கு மேலு முள்ள பாகம்; இதனை வடமொழியாளர் 'ஜகனம்' என்ப. விழவு - விழாவைக் கண்ணுற்றாற்போன்ற இன்பம் (ஆகுபெயர்). 'கண் விழவு தரூஉங் கண்ணி' (பெருங்கதை, 3-9, 5) என்றார் பிறரும். பழவில், வில் - ஒளி. பறை-பறத்தல்; இறகுக்கு ஆகுபெயர். கண்மாறின்று - கண்மாறிற்று, இடம் மாறிவிட்டது; 'யான் கண்மாறக் குறிபெறூஅன்' என்பது குறிஞ்சிக்கலி 10-18. 'பெயல் கண்மாறிய உவகையர்' என்பது புறம், 143-4 இவ்விடத்தைவிட்டு அவ்விடத்துப் போயிற்று; 'புகழ்கண் கூடிய' (சிந்தா-327) என்றவிடத்துப் போலக் 'கண்' என் பதை அசையாகக் கொண்டு, 'மாறின்று' என்றே உரைத்த லும் ஒன்று.

உள்ளுறை உவமம்:—பறந்துசென்று இரையைப் பெற் றுண்ணும் ஆற்றலழிந்த நாரை நீரிற் படிந்த கிளைமீதிருந்து மீன் தானே கிட்டுவதை எதிர்பார்த்து வாளா இருப்பது போலத். தலைமகளை வரைந்துகொள்வதற்கு வேண்டிய முயற்சியைச் செய்யமாட்டாத தலைமகனும் தோழியி னுதவி யால் அவள் தன் கைக்குக் கிட்டுங்காலத்தை எதிர்பார்த்துத் தனதூரின்கண்ணே சும்மா இருந்துவிட்டான் என்பதாம்

ஒக்கூர் மாசாத்தியார்] 126 [முல்லை

பொருள்வயிற்பிரிந்த தலைமகன் தான் வரக்குறித்த கார்ப் பருவம் வந்தும் வாராமையால் அழிந்த தலைமகள் தோழிக் குரைத்தது.

இளமை பாரார் வளநசைஇச் சென்றோர்
இன்னும் வாரார்; எவணரோ வென்ப;
பெயல்புறந் தந்த பூங்கொடி முல்லைத்

தொகுமுகை யிலங்கெயி றாக
நகுமே, தோழி, நறுந்தண் காரே.

(உரை). இளமை (நீடித்துநில்லாதது என்பதை) நோக்காராய்ப் பொருளையே விரும்பிச் சென்ற காதலர் இன்னும் திரும்பி வந்திலர்; அவர் எவ்விடத்திருக்கின்றனரென்பது தெரியவில்லை என்பர்; மழைபெய்து பாதுகாத்து வளர்த்த அழகிய முல்லைக்கொடியின் வரிசையாக அரும்பிய(முல்லை) அரும்புகளையே பற்களாகக் கொண்டு நன்மணம் பொருந்திய இக் கார்காலம், (அவர் வருவதாகச் சொன்ன வார்த்தையை மெய்யென்று நம்பி, 'அவர் விரைவின் வந்திடுவார், சிறிது ஆற்றியிரு' என்று என்னைத் தேற்றும் உன்னையும், அதனால் உயிர்தரித்து வருந்தும் என்னையும், இகழ்ந்து) சிரித்திடும்; அன்றே.

இளமை - (ஆகுபெயர்) இளமைப் பருவம் கழிந்துவிடுதல். பாரார், முற்றெச்சம். வளம் - பொருளின் வளப்பம். எவணர் - எவ்விடத்தினர் ; 'எவணரோ ?' என்றது தலைமகன் வாராததுமன்றித் தான் இருக்குமிடத்தையுங்கூடத் தெரிவித்திலன் என்றதற்கு. பெயல் - மழை.

ஓரம்போகியார்] 127 [மருதம்

பரத்தையிற் பிரிந்த தலைமகன் தலைவியிடத்துப் பாணனை முந்தி வாயிலாகவிடுத்து அதன்வழிப் பின் புக்கபோது தலைவி வாயில்நேர்ந்தது புலப்பட அவனுக்குத் தோழி சொல்லியது.

குருகுகொளக் குளித்த கெண்டை, அயல
துருகெழு தாமரை வான்முகை வெரூஉங்
கழனியம் படப்பைக் காஞ்சி யூர;
ஒருநின் பாணன் பொய்ய னாக
உள்ள பாண ரெல்லாம்
கள்வர் போல்வர்நின் னகன்றிசி னோர்க்கே.

(உரை). நாரை வௌவவருதலை அஞ்சி நீரினுள் (ஒளிய) மூழ்கிய கெண்டைமீன் பக்கத்திலுள்ள பெரிய தாமரையின் சிறந்த மொக்கை (நாரையென்று) அஞ்சும், கழனிகளின் பக்கங்களில் காஞ்சிமரங்களையுடைய மருதநிலத் தலைவா, உனது தூதனாகவந்த இந்தப் பாணனொருவன் பொய்சொல் பவனாக, ஊரிலுள்ள மற்றைப் பாணரெல்லாம் பொய் சொல்லி வஞ்சிப்பவராகவே உன்னைப்பிரிந்து வாழ்வார்க்குத் தோன்றுவார்.

உருகெழு - உருவிற் பெரிய; வெள்ளாம்பலின் மொட்டும் வெண்டாமரையின் மொக்கும் நாரையின் வடிவத்தைப் போன்று தோன்றும். படப்பை - பக்கம்; தோட்டமுமாம். காஞ்சி - மருதநிலத்திற் குரியதோர் மரம். அகன்றிசினோர் - 'இசின்' இங்குப் படர்க்கைக்கண் வந்த அசைநிலை.

இறைச்சி:—தீங்கிழைக்கும் நாரையை அஞ்சியமீன் தீங்கற்ற தாமரையையும் நாரையென்று அஞ்சுவதுபோலப் பொய்யனாகிய ஒரு பாணனை வஞ்சகனென்றுணர்ந்த மகளிர் பிற பாணரையும் அவ்வாறே மதித்திடுவார் என்று குறிப்பாலும் வற்புறுத்திக் கூறியவாறும்.

பரணர்] 128 [குறிஞ்சி

அல்லகுறிப்பட்டுத் தலைமகளின் கூட்டத்தைப்பெறாது மீளுந் தலைமகன் தன்னெஞ்சினை நெருங்கிக் கழறியது.

குணகடற் றிரையது பறைதபு நாரை
திண்டேர்ப் பொறையன் றொண்டி முன்றுறை
அயிரை யாரிரைக் கணவந் தாங்குச்
சேய ளரியோட் படர்தி;
நோயை நெஞ்சே; நோய்ப்பா லோயே.

(உரை). கீழ்கடலின் அலையிடத்ததான இறகின் வலி கெட்ட நாரை (மேல்கடற் கரையிலுள்ள) வலிய தேரையுடைய சேரனது 'தொண்டி' என்னும் ஊரின் முன் துறையிடத்துள்ள அயிரைமீனாகிய அரியவுணவுக்கு மேனோக்கி நின்று வருந்தினாற்போல, வெகு தூரத்திலுள்ளவளும் பெறுதற்கரியவளுமான தலைமகளை விடாது நினைத்து அதனால் வருந்துகின்றனை; நெஞ்சே, நீ இனி என்றும் வருந்தும் ஊழினை உடையாய்.

பறை-(ஆகுபெயர்) இறகின்வலிமை. தபு - (தன்வினை) கெட்ட. பொறையன் - சேரன். ஆரிரை - அரியவுணவு. அணவந்து - அணந்து; அணத்தல் - மேல்நோக்கிப் பார்த்தல். படர்தல் - இடைவிடாது நினைத்தல். பால் - ஊழ், விதி, பழவினை. தொண்டி - சேரமன்னரது முக்கிய நகரங்களிலொன்று;பெரிய துறைமுகம். 'திண்டேர்ப்பொறையன் தொண்டி' என்ற இச் சொற்றொடரும், 'தொண்டிமுன் துறை' என்ற சொற்றொடரும் முறையே அகம் 60-ம் பாட்டிலும், 290-ம் பாட்டிலும் வந்திருத்தல் காண்க.

இப்பாட்டின் துறையும் கீழ் 120-ம் பாட்டின் துறையும் ஒன்றே.

கோப்பெருஞ்சோழனார்] 129 [குறிஞ்சி

பாங்கற்கூட்டம் வேண்டி அவனையுற்றதலைமகனைப் பாங்கன் உற்றது வினவியபோது அவனுக்குத் தலைமகன் பகர்ந்தது.

எலுவ, சிறாஅ ரேமுறு நண்ப,
புலவர் தோழ, கேளாய் அத்தை;
மாக்கட னடுவண் எண்ணாட் பக்கத்துப்
பசுவெண் டிங்கள் தோன்றி யாங்குக்
கதுப்பயல் விளங்குஞ் சிறுநுதல்
புதுக்கோள் யானையிற் பிணித்தற்று லெம்மே.

(உரை). பாங்க, சிறுபிள்ளைகளின் பாதுகாவலையுடைய நண்ப, அறிஞர்தந் தோழ, நான் சொல்வதைக்கேள்; வளர் பிறைப் பக்கமாகிய சுக்கிலபக்ஷத்துப் பசியவெள்ளிய எட்டா நாட் பிறைச்சந்திரன் கருங்கடலின் நடுவிலே தோன்றினாற் போல அப்பெண்ணின் கூந்தலினயலே விளங்குஞ் சிறிய நெற்றி, புதிதாகப் பிடிக்கப்பட்ட யானையைப் பிணிப்பது போல என்னைப் பிணித்திட்டது.

'எலுவ' என்றது அவன் பாங்கன் என்பதையும், 'சிறாஅர் ஏமுறு நண்ப' என்றது அவன் பார்ப்பனப்பாங்கன் என்பதையும், 'புலவர் தோழ' என்றது அவன் கற்றறிபாங்கன் என்பதையும் உணர்த்தவந்தன; அவன் தனது குறையை மறுக்காவண்ணம் இவ்வாறு பலபடஅவனைப்புகழ்ந்து விளித்தானுமாம். அத்தை-ஒரு முன்னிலை அசை. பக்கம் - பக்ஷம்; பதினைந்துநாட் கொண்டதொரு கால அளவு; ஒவ்வொரு மாதமும் இவ்விரு பக்ஷங்கொண்டது; ஒன்று தேய்பிறைப்பக்கம் (கிருஷ்ணபக்ஷம்),மற்றொன்று வளர்பிறைப்பக்கம் (சுக்லபக்ஷம்). சுக்லபக்ஷத்து அஷ்டமிச்சந்திரனைப் பெண்களின் நெற்றிக்கு உவமையாகக் கூறுதல் பெருவழக்காதலின், இங்குப் 'பக்கத்து' என்றதற்குச் 'சுக்கில பக்கத்து' என்று பொருள் கூறினும். பசுமை - புதுமை; freshness. கதுப்பு - மகளிர் கூந்தல். பிணித்தற்று-பிணித்தது. எம்மே - 'எம்மையே' என்று இரண்டனுருபு விரிக்க.

வெள்ளிவீதியார்] 130 [முல்லை

சேணகன்ற தலைமகனதுபிரிவு நீட்டித்தவிடத்துத் தனித்திருக்க ஆற்றாளாகிய தலைமகள் அவனைத் தேடி அழைத்து வருவதற்குத் தூதுவரை அனுப்பும்படி தன் தோழியைக் குறிப்பால் வேண்டிக் கூறியது.

நிலந்தொட்டுப் புகாஅர்; வான மேறார்;
விலங்கிரு முந்நீர் காலிற் செல்லார்;
நாட்டி னாட்டின், ஊரி னூரின்,

குடிமுறை குடிமுறை தேரிற்
கெடுநரு முளரோநங் காத லோரே.

(உரை). நங் காதலர், நிலத்தைத் தோண்டிக்கொண்டு பாதலத்துப் புகமாட்டார்; வானத்தின் மீதேறிச் செல்லமாட்டார்; குறுக்கிட்ட கரிய கடலைத் தேரின் மீதேறிச் சென்று கடக்கமாட்டார்; ஆகையால், நாடுகள் தோறும், ஊர்கள் தோறும், குடியிருப்பிடங்கள் தோறும் முறையாகத் தேடின் அகப்பட்டு விடுவார். (கண்டுபிடிக்க முடியாதபடி) கெட்டுப்போயினார் அல்லர்.

தொட்டு - தோண்டி, வெட்டி; digging up. கால் - தேருருளை; (இங்கே ஆகுபெயராய்த் தேரைக் குறித்து வந்தது) குடி - குடியிருப்பிடம் - 'குடிமுறை குடிமுறை 'என்பதைக் 'குடியிற் குடியின் முறைமுறை'என்று மாற்றி உருபுவிரித்துக் கொள்க. 'குடி முறை' - 'முறை' யென்பதை ஆகுபெயராகக் கொண்டு 'குடிகள் முறைப்பட வாழுமிடம்' என்றலுமொன்று. நாடு - தேசம்; அதனிடத்திலுள்ளன பலவூர்; ஊரினிடத்துள்ளன பல குடியிருப்பிடம்; ஆதலின், நாடு, ஊர், குடியென்று தேடவேண்டிய இடங்களை முறைப்பட வைத்தாள். கெடுநர் - அசப்படாமற் கெட்டுப்போனவர்; those who are lost beyond search and recovery.

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்— 2. மந்தரை சூழ்ச்சிப் படலம்.

[636-வது பக்கத் தொடர்ச்சி]

அமரர்க்கோர் கருவியே கேகயி யாயினள்.

"இராமனைப் பயந்தவெற்கு இடருண்டோ" வென்றும், 'பரதனைப்பயந்த கோசலை தன் மதியினால் எய்துதற்கு மேலொருவாழ்வு யாதினி யுளது" என்றும் புரிந்ததொரு பரிவருத்தனையால்பெருமைசான்ற கேகயன்மாமகள் தூயசிந்தனை திரிந்து கூனியின் கொடிய வஞ்சனைக் கைகளில் வளரப்போகின்றாள் என்பதை உன்னுங்கால் நம்மனோருள்ளந் துண்ணெனச் சிறிது துடிக்குமாதலால் அதனை ஆற்றுவார்போல், "தூமொழி மடமான் இரக்கமின்மையன்றோ இன்றிவ்வுலகங்கள் இராமன் பரக்குந் தொல்புக ழமுதினைப் பருகுகின்றதுவே" என வோர் அருமையாய இலேசத்தைக் கம்பர்பெருமான் நமது கருத்தினுட் பதியவைக்கின்றார். தன்னுள்ளத்தில் பற்றிய கொடுமையின் தீமையாலல்லாமல் இமையவர் செய்த மாயைகள் அனைய அயற்காரணங்களாலேயே கைகேயி இன்று இராமன்பால் இரக்கமற்றவளாய் நின்றாளென்பதையும், இவ்விரக்கமின்மையால் இவ்வுலகங்களெல்லாம் பல்வேறு இன்பங்களைத் துய்க்கும் பாக்கியத்தை எய்தின வென்பதையும் நினைக்குங்கால், பேதையக் கைகேயியைக் கண்டு யாவரும் பரிந்திரங்குவாரல்லது இகழ்ந்தொருவரும் வெறுக்கமாட்டார். எனின்,

அனைய தன்மைய ளாகிய கைகய னன்னம்
வினைநி ரம்பிய கூனியை விரும்பின னோக்கி
எனையு வந்தனை யினியையென் மகனுக்கு மனையான்
புனையு நீண்முடி பெறும்படி புகலுதி யென்றாள்

[அத்தன்மையளாகிய கைகேயி, சூழ்ச்சிகள் நிறைந்த கூனியை விருப்பத்துடன் பார்த்து, "நீ என்பால் விருப்பமுடையவளாயிருக்கின்றாய். என் புத்திரன் பரதனுக்கும் நல்லவள். அவன் அழகிய பெரிய கிரீடத்தைப் பெறக்கூடிய வழியைச் சொல்,"]

என்று, "எனக்கு நல்லைபல்லை நீ யென்மகன் பரதன் தனக்கு நல்லையுமல்லை" எனக் கடிந்தவாய் உலருமுன், "எனையுவந்தனை இனியை என்மகனுக்கும்"என்று தலைகீழ்மாறிய கைகேயியின் செய்கையை நினைக்குங்கால் இராமனது பரக்குந் தொல்புக ழமுதினை அருந்தநிற்கும் ஊக்கத்தால் உள்ளங்கிளர்ந்தோங்குமேயல்லாது, அன்னான் சிற்றன்னை இவள்பால் சீற்றங்கொள்ளுதற்கொருவர் சிந்தையிலும் இடமில்லாத தாகின்றது.

இன்னவாறிவள் உரைத்தபோது கூனியின் குறுகிய உள்ளத்தில் "வென்றனென் வினையினால் இவ்வொருவனிதையை, இராமன் பாணியில் லுண்டையாற் பண்டை நாளுண்டபழியை இன்று தொலைத்தனென்" என்று கொந்தளித்துப்புரண்ட மகிழ்விற்கோர் கரையில்லை. அவ்வளவில்,

மாழை யுண்கணி யுரைசெயக் கேட்டமந் தரையென்
தோழி வல்லளென் றுணைவல்ல ளென்றடி தொழுதாள்
தாழு மந்நிலை யென்னுரை தலைநிற்பி னுலக
மேழு மேழுமுன் னொருமகற் காக்குவே னென்றாள்.

[மாவடுப்போன்ற கண்களையுடைய கைகேயி அவ்வார்த்தைகளைச்சொல்ல, அதனைக்கேட்ட மந்தரை, "என் தோழியாகிய நீ சாமர்த்தியமுள்ளவள், என் துணைவியாகிய நீ சாமர்த்தியமுள்ளவள்" என்று கைகேயியின் பாதங்களைத் தொழுது, "நீ இறுமாந்து என்னை வெறுக்காமல் பணிவுடன் இந்த நிலையில் என் சொற்படி நடப்பாயாயின், இந்தப் பதினன்கு உலகங்களையும் உன் ஒரு மகனுக்கு உரிமையாக்குவேன்" என்றாள்]

என்று பின்னரும், [யாய்

நாடி யொன்றனக் குரைசெய்வெ னளிர்மணி நகை
தோடி வர்ந்ததார்ச் சம்பரன் தொலைவுற்ற வேலை
ஆடல் வென்றியா னருளிய வரமவை யிரண்டும்
கோடி யென்றன ளுள்ளமுங் கோடிய கொடியாள்.

[உடலன்றி மனமுங் கோணிய கொடியவளாகிய அம்மந்தரை, ' குளிர்ந்த முத்தைப்போன்ற பற்களை உடையவளே, நன்றாக ஆராய்ந்து உனக்கொரு காரியம் சொல்கின்றேன், கேள். இதழ்கள் அடர்ந்த மாலையை அணிந்த சம்பராசுரன் தோல்வியுற்ற காலத்தில், போரில் வெற்றியடைந்த தயரதன் உனக்குக் கொடுத்த அவ்வரங்களிரண்டையும் இப்பொழுது கேட்டு வாங்கிக்கொள், என்றனள்]

அவ்வரங்களினுருவங்கள் எவ்வகைத்தாதல்வேண்டுமென்பதையும்,

இருவ ரத்தினி லொன்றினா லரசுகொண் டிராமன்
பெருவ னத்திடை யேழிரு பருவங்கள் பெயர்ந்து
திரித ரச்செய்தி யொன்றினாற் செழுநில மெல்லா
மொருவ னெய்தடு முன்மகற் குபாயமீ தென்றாள்

[இருவரங்களில் ஒன்றினால் இராச்சியத்தை வாங்கிக்கொண்டு, மற்றதனால், இராமன் பெரிய காட்டினிடத்தே சென்று பதினான்கு வருடங்கள் திரியும்படி செய். செய்தால், வளப்பமுடைய இவ்வுலகங்களெல்லாம் உன்மகன் ஒருவனையே சேரும். உபாயம் இதுதான்" என்றாள்]

கேட்டனள் கேகயன் மாமகள் கிளர்ந்தெழுஞ் சிந்தையளாய், உரிய காரணங்களன்றியும் பரதனிப் பாரினை அடைவதற்கொரு கடக்கலாகா உபாயமும்,

உரைத்த கூனியை யுவந்தன ளுயிருறத் தழுவி
நிரைத்த மாமணி யாரமும் நிதியமும் நீட்டி
இரைத்த வேலைசூ ழுலகமென் னொருமகற் கீந்தாய்
தரைக்கு நாயகன் தாயினி நீயெனத் தணியா

[கூறிய கூனியை மகிழ்வுடன் உயிரோடுயிர் இணையும்படி இறுகத்தழுவி, வரிசையாகக்கோத்த சிறந்த இரத்தின ஹாரமும் செல்வங்களையும் அவளுக்குக் கொடுத்து, "என் ஒரு மகனுக்கு, ஒலிக்கின்ற கடல்சூழ்ந்த உலகத்தைத் தந்தாய், ஆதலால் இனிமேல், பூமிக்கரசனாகிய அவனுக்கு நீயே தாயாகின்றாய்" என்று, பின்னரும்]

நன்று சொல்லினை நம்பியை நளிர்முடி சூட்டல்
துன்று கானத்தி லிராமனைத் துரத்தலிவ் விரண்டு
மன்ற தாமெனி னரசன்முன் னுருயிர் துறந்து
பொன்றி நீங்குதல் புரிவென்யான்போதிநீ யென்றாள்.

[நன்றாகச் சொன்னாய் பரதனுக்குப் பெருமைவாய்ந்த கிரீடத்தைச்சூட்டுதலும், அடர்ந்த காட்டிற்கு இராமனைத் துரத்திவிடுவதும் ஆகிய இவ்விரண்டும் முடிக்கவில்லையாயின் தயரதன்முன் என் அருமையான உயிரைவிட்டு நான் இறந்தொழிவேன்—திண்ணம், இனி நீ போகலாம்" என்றாள்]

இரக்கந்துரந்து கூனியின் வயத்தளாய் நின்ற கைகேயி இராமனை இருங்கானந் துரத்துமாறு துணிந்த வண்ணமிவ்வண்ணம். பயந்தவள்தானென விளம்பிய இம்மடந்தை ஈரேழாண்டுகளவ் விராமனை அடவியுள் புகுத்திய கருத்தினை ஸ்ரீ சோமசுந்தரபாரதியார் பகர்ந்துள சிலமொழிகளை முன்னிட்டுச் சிறிதிங்கு ஆய்ந்தறிய வேண்டுவ தவசியமாகின்றது. "இராமன்பால் வைத்த பேராதரப் பிணிப்புண்டு அறமிறந்தவேந்தன்" பண்டைநாள் செய்துள 'சுல்க'ப்பிரதிஞைக்குமாறாக, "இராமனுக்கு முடிசூட்டி அரசுதருவன்; தரின் தன் கணவன் பாவமும் பழியும் எய்துவது உறுதி; அதனாற்றாழாது பிரதிஞாபங்கதோஷத்தினின்றும் கொழுநனைக்காத்து, அவன் முன் மரபுடைச் சொல்லையும் அறநெறியையும் ஓம்பல் அவன்பால் நிறைவளர் காதலுடைய தன் கற்பறக்கடனாகக் கண்ட கைகேயி, அக்கடனாற்ற இராமாபிஷேகம் நடவாது இடைநின்று தடுப்பதன்றி வேறுவழி காணாமையால் தானதனைத் தடுக்கத் துணிகின்றாள். (தன்னல விருப்பாலேனும் தன்னொருமகன் ஆக்கத் தாசையாலேனு மன்று அவள் இராமன் முடிசூடுதலைத் தடுக்கத் துணிந்தது)— துணிந்ததும், செயன்முறை தெளிந்து, தன் காதற் றனிக்கிழவனை தசரதன்பாற் பழிவிலக்க அவனிடந் தான் முன் பெற்றுவைத்த வரங்களை முன்னிட்டு, அரசை அவன் முன்மரபுடை அறச்சொல்லால் அதற்குப் பிறந்துரிய பரதன தாக்கவும், எனைத்தானும் அதற்குப் பங்கமேற்படாது காக்கவும் ஆவனதேர்ந்து, முடிவும் ஓர்ந்து, செயல் சீர்தூக்கி, வினைமேற் கொள்கின்றாள்" என்பது ஸ்ரீமான் பாரதியார்ன்கூற்று. மன்னவன்தன் புகழிற் கிறுதிகாணாமல் அவன் வாய்மையறத்தினைக் காக்கவேண்டுமென்பது கைகேயியின் கருத்தாயின், சுல்கப்ரதிஞையி னுண்மையைப் பலரறியப்பகர்ந்து அவனை வாய்மையிற்றலைநிற்கவைத்தல் தக்கதன்றென அவர்காட்டுங் காரணங்கள் நியாயமானவைகளே. தான் பொய்க்கப்புகுந்ததைக் கைகேயியும் ஏனையோரும் தெரிந்துகொண்டுவிட்டனர் என்பதைத் தயரதன் உணர்ந்து அமைதி துறந்தபின் அறங்காக்க வைப்பதேனும், மற்று அமைச்சரும் அந்தணரும் அரண்மனையுள்ளவர்களும் நகரமாந்தரும் உலகமும், இராமன்பால் அளவிறந்த அன்பினால் தயரதன் ஓரஞ்சாய்ந்து வாய்மைநெறி விலகித் தீவினை நயந்து செய்யத்தலைப்பட்டான் என வெறுக்குமாறு சுல்கப் பிரதிஞையை வெளிப்படையாக்கிய பிறகு அவன் புகழினைப் போற்றும்வண்ணம் இச்செயல் புரிந்ததாகவேனும் சிந்தித்தற் கொவ்வாது. ஆதலின், இச்சுல்கப் பிரதிஞை வெளிப்படாமல் மறைத்து, வரமிரண்டும் பெறுவதனை நிபமாய்வைத்து, "தீயவையாவையினுஞ் சிறந்த தீயாள்" என்று கம்பரேமுதல் யாவரும் பழித்தற்குரியவளாய்த் தன்னை ஆக்கிக்கொண்ட உத்தமி இவள் என்றுகூறுவதும் பொருந்தும். சுல்கப்பிரதிஞை செய்திருப்பதை இடித்துரைத்துப் பரதனுக்குப்பாரினைவழங்குமாறு வற்புறுத்தாமல் சம்பராசுரனுடன்புரிந்தபோரினில் பெற்றுவைத்த வரமிரண்டினைக் கருவியாய் இவள் கையாண்டதன் உட்பொருள் இதுவெனச்சாற்றிப்பின், "பரதனுக்குமாத்திரம் முடிசூட்டுவித்தல் போதாமல், இராமனை யவள் காட்டிற்கு அனுப்பியது ஏன்? அதனினும் பதினான்கு வருடங்கள்போக்கியதன் பொருள் என்ன" வென்று நுணுகி ஆராயப் புகுகின்ற பாரதியார், இராமன்பா லளியுறாத தூய சிந்தையளாகிய இம்மாற்றன்னை அந்நாளவனைச்சேய்த்தாய வனஞ்செறிக்க வெண்ணிய காரணங்கள், 'அறத்துறை நியதியும் அரச நீதியுமே' ஆதல் வேண்டும் என வகுக்கின்றனர். இக்காரணங்களின் அமைதியை நிறுவுமாறு அவர், மகவாசையால் வாய்மையறமிகந்த வேந்தன் மீண்டும் அல்லவை ஆற்றாதவாறு அவன் மனது புனிதநிலையில் நிற்பதற்கு அவன் அவல ஆசையின் இலக்காய இராமனைப் பிரித்து வைத்தல் இன்றியமையாததென்றும்; அயோத்தியிலேயே அக்குரிசில் இருப்பானாயின் அவன் பக்கமும் ஒக்கலும் நட்பின் ஆயமும் அவன்பொருட்டுப் படையெடுத்து அரிதிற்பெற்ற அரசிலே பரதன் அமர்ந்திட இயலாதவாறு குழப்பங்கள் பல புரிவாராதலின், அப்பரதன் தன்னுடைய தனிப்பெருந் தகைமையால் யாவர்தம் உள்ளத்தையும் தன்வயமாக்கிக்கொள்ளும் வரையில் இராமன் அயல்நின்று ஆடாதிருப்பதே ஏற்றதென்றும்; கற்புயர் கைகேயி வினைசெயல்வகை குனித்து, இருவரங்களால் இக்காரியத்தை நிகழ்த்தினளெனக் கரிகளுங் குறிகளும் மேற்கோள்களும் காட்டித் தான் கைக்கொண்ட வாதத்தை நிறுவவருகின்ற திறமை நனிமிகப் பாராட்டற்பாலதே. எனினும் இவைகளி னமைதியைத் தேர்ந்துகொள்ள முயல்வாரீங்கு மயக்கறத்தெளிந்து நீங்கா நினைவினராய்ப் போற்றுதற்குரிய பொருளொன்றுளது. வான்மீக வரலாற்றைக் கம்பர்பெருமான் எத்துாரம் பின்பற்றுகின்றாரென்பதையும், கவர்நெறி யொன்று காணுங்கால் கம்பர் வான்மீக முனிவரைத் தொடர்கின்றாரோ அல்லது விலகிச்சென்று வேறுவழி படர்கின்றாரோ என்பதைக் கருத்துட்கொண்டு, 'இன்னதே இது' வெனத் தெளிந்தபின்னரே கம்பரதுகருத்து எவ்வகைத்தெனும் முடிவினை எய்துதல் வேண்டும். அவ்வாறின்று இவ்விரண்டினையும் இணைத்திணைத்து இதனிற் சிறிதும் அதனிற் சிறிதும் கலந்து ஒன்றெனக் கலங்குங் காட்சியால் நிறுவுகின்ற சித்திரம் உறப்பிற்குறப்பு இயையின்றித் தோன்றலாவது திண்ணம்.

முருகன் அல்லது அழகு

ஸ்ரீமான்-திரு. வி. கலியாணசுந்தரமுதலியார் யாத்தது. இஃது இயற்கை அழகை எடுத்துக்கூறும் நூல். இயற்கை அன்னையின் மாண்பை இந்நூற்கண் காணலாம். இந்நூற்கண் முருகன் சொற்பொருள் விளக்கம், அழகினியல், இளமைப்பேறு, இயற்கை மாண்பு, நோன்பு, வழிபாடுகளின் திறம், முருகனடியார் இயல்பு முதலியன ஓதப்பட்டிருக்கின்றன. இந்நூலை முற்றும் பயில்வோர் உள்ளத்தில், இயற்கை வழிபாட்டில் ஆர்வம், ஒரே கடவுள் ஒரே நெறி என்னும் உறுதி, எவ்வுயிர்க்குந் தீங்கு நினையாப் பேரறம் முதலியன நிலவும். இயற்கை வருணனையும் உரை நடையும் நெஞ்சைக் கவரும்.

விலை ரூபா 1.

		ரூ.	அ.
மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்	...	2	8
பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை	...	2	0
தமிழ்த் தென்றல்	...	2	0
இராமலிங்கசுவாமிகள் திருவுள்ளம்	...	1	0
சைவத் திறவு	...	0	8
என்கடன் பணிசெய்து கிடப்பதே	...	0	8
சைவத்தின் சமரசம்	...	0	8
கடவுள் காட்சியும் தாயுமானாரும்	...	0	4
தமிழ் நூல்களில் பௌத்தம்	...	0	4

இந்நூல்கள் எல்லாவற்றையும் ஏககாலத்தில் வாங்குவோருக்குத் தபாற்செலவின்றி, மணியார்டர் கமிஷன் கழித்து வி. பி யில் அனுப்பப்படும்.

முருகவேள் புத்தகசாலை,
இராயப்பேட்டை, சென்னை.

அரிய தமிழ்ப் புத்தகங்கள்.

சூளாமணி மூலம் (தோலா மொழித்தேவர்)		2	8
ஷை வசனம்	... ...	1	0
தமிழ் தமிழ் இங்கிலீஷ் அகராதி (வீரமா முனிவர்)	... ...	2	8
சதுரகராதி	... ...	3	0
தேம்பாவணி விருத்தியுரை	... ...	6	8
ஞான போதினி (3-வது தொகுதி) (1899-1900) பழைய மாதப் பத்திரிகை		5	0
சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ்	...	0	10
திராவிடர் மத்தியகாலக் கதைகள்	...	1	0

புதிய பதிப்புக்கள்.

சோமேசர் முதுமொழி வெண்பா உரை (சிவஞான சுவாமிகள்)	... ...	1	12
சிவஞான சுவாமிகள் பிரபந்தம் (செய்யுள்)		2	8
ஷை வசனம்	... ...	1	12
குமரகுருபர சுவாமிகள் பிரபந்தம்	...	3	8
அந்தாதிக் கொத்து	... ...	1	12
பிள்ளைத் தமிழ்க்கொத்து	... ...	3	0
சைவசித்தாந்த உரைக் கொத்து	...	2	0
நீதிநூற் கொத்து உரை	... ...	1	0
நானூற்பது உரை	... ...	1	8

விரிவான புத்தக விலைப்பட்டி இனாம்:

சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்,
6. பவளக்காரத் தெரு, சென்னை.

கே. பழனியாண்டிப்பிள்ளை கம்பெனி

பிரசுரங்கள்.

சங்க நூல்

சென்னைப்பச்சையப்பன் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர்
திருவாளர் - கா. ரா. கோவிந்தராஜ முதலியார்
எழுதியது.

தமிழின் அரும்பெரும் செல்வமாய் வாய்த்திருக்கும் சங்ககால இலக்கியங்களைக் கற்பவர்க்கு இணையிலாப் பேருதவி யளிக்கவல்ல இந்நூல் எவ்வெவர் மாட்டும் இருக்கவேண்டியது இன்றியமையாதது. முச் சங்கங்களின் வரலாறும், அவ்வச் சங்கங்களில் பாடப்பெற்ற நூல்களின் தன்மையும், இவையனைய பிறவும் இந்நூலின்கண் விளக்கிஇருக்கக் காணலாம். இத்தகைய அறிவினை யளிப்பதுடன் ஓதுதற்கும் கனி இனிது இந்நூல். தமிழ்ப்பற்றுடையவ ரனைவர் கையிலும் இந்நூலொன்று இல்லாமல் தீராது. சங்க நூல்களைப் படிக்க ஆரம்பிப்பதற்குமுன், இந்நூலைக் கற்றிருப்பாராயின், அச் சங்கநூல்களின் உண்மைப் பொருளையும், அழகையும், பயனையும் உணர்வது எளியதாகும். விலை ரூபா 1—4—0.

கந்தபுராண வசனம்

வித்வான்
என். வி. முத்துகிருஷ்ண ரெட்டியாரவர்கள்
எழுதியது.

முருகப் பெருமானது திருவவதாரச் சிறப்பினை யுரைக்கும் கச்சியப்பசிவாசாரியார்தம் பெருங்காப்பியமாகிய கந்தபுராணச் செய்யுள்களைத் தழுவித் தெளிவும் இனிமையும் வாய்ந்த செந்தமிழ் வசனநடையில் எழுதப்பெற்றுள இந்நூல், முதனூலின் பெருமையிற் சிறிதுங் குறையாமல், தமிழழகு பூத்துச் சைவசித்தாந்த நறுமணம் வீசிப் பத்தித்தேன் சொட்டி ஞானங் கனிந்த வொரு கற்பகத் தருவிற்கு நிகராகு மென்பதிலையமில்லை. ஆறுமுகமுடைய அருட்பெறும் குமரவேளின் திப்பிய சரித்திரத்தைச் செய்யுள்வாயிலாக ஓதியுணர்ந்து அவர் கருணைக்கு ஆளாகவல்லார் சிலரேயாக, எத்தகையினோரும் எளிதில் படித்துத் தெரிந்து கொள்ளுமாறு வசனநடையில் வரைந்துள இந்நூல் தமிழரனைவர்க்கும் அருமருந்துபோல் அமைந்திருக்கின்றது. (கிளேஸ் பேபர்) விலை ரூபா 2—8—0.

கே. பழனியாண்டிப்பிள்ளை கம்பெனி
திருவல்லிக்கேணி, :: :: சென்னை.

கலா நிலயம்

1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :—சேக்கிழார் திறனும் கண்ணப்பர் பக்தியும் விளக்கும் கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், உதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. மலர்வனம், பழமுதிர் சோலை :—சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலைக் கட்டுரைகள் 14.
5. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவியவியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
6. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
7. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
8. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப்பட்ட கட்டுரைகள் 20.

மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரிடரிக்நீஷேயன், எபிகுயூரன், ஜீனோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஓயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. கலா நிலயம்:—வறியரோ நாம், உரிமையின் பொய்மை, கட்டளைக்கல், செய்வதிற் சொல்வதே அரிது, அரிசிவிற்க அந்தணன் வேண்டுமாம், புலமைக்குரிய பொய், கலைகளேகதி 6, வள்ளுவர் வாய்மை 6, பாரதி, இராஜா அண்ணாமலை சங்கீத கலாசாலை, சொற்றொடர் ஆரவாரம் 8, கல்சரைப்பற்றிய கட்டுரை 24 முதலியன ஆகும்.
2. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
3. அப்பர்:—பிறப்பும், இளமையும் யௌவனமும் பல சமயவாராய்ச்சியும், சிவஸ்தல யாத்திரை, அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பமும், கவிகளின் பகுதிகள், நாடகவியல், அப்பர் கவித்திறம் ஆய கட்டுரைகள் 50
4. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
5. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை 20 இதழ்களில் வந்துளது
6. அகப்பொருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
7. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
8. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 28.
9. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
10. நம்மாழ்வார் வைபவம் :—நம்மாழ்வார் பாடிய பிரபந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் 12-ல் வந்துள.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகையிலைமுதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

மேற்கூறிய இரண்டு வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

உள்நாடு	ரூ.	அ.	ப.	வெளிநாடு	ரூ.	அ.	ப.
பைபிண்டு செய்யாதது	8	0	0	பைபிண்டு செய்யாதது	9	8	0
காலிகோ பைண்ட்	9	8	0	காலிகோ பைண்ட்	11	0	0
ஆப்லெதர் பைண்ட்	10	0	0	ஆப்லெதர் பைண்ட்	11	8	0

:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::

வர்த்தமானம்

முழு வளர்ச்சிபெற்ற திமிங்கலம் ஒரே தடவையில் 47 மனிதர்களை விழுங்கக் கூடும் என்று ஒரு ஆராய்ச்சியாளர் கூறுகின்றார்.

***

எமக்குவந்த சென்னைக் கவர்மெண்டின் சட்ட இலாக்கா அறிக்கையொன்று, இதுவரை சத்தியாக்கிரஹக் கைதிகளில் 701 பேர் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு விடுதலைபெற்றிருக்கின்றனர் என்று கூறுகின்றது.

***

சென்ற இரண்டு ஆண்டுகளாக வடநாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்துவந்த வானமாமலை ஜீயர் ஸ்வாமிகள் ஆகஸ்டுமாதம் 15-ந்தேதி யன்று வானமாமலைக்குப் போய்ச்சேர்ந்தார் என்று ஒரு நிருபர் அறிவிக்கின்றார்.

***

பம்பாய் மில் சொந்தக்காரர்கள் வியாபாரக்குறைவினால் தங்கள் மில்களை மூடிவருகின்றனர். சாசூன் கம்பனியார் தங்கள்மில்களில் இரண்டைச் சென்றவாரம் மூடிவிட்டனர் என்றும், இன்னும் அவர்களுக்குச் சொந்தமான 8-மில்களும்இம்மாதக்கடைசியில் மூடப்பெறும் என்றும், இம்பொழுது மூடலான இரண்டு மில்களில் வேலைசெய்திருந்த 2500 தொழிலாளர்வேலையில்லாது போயினர் என்றும் பம்பாய்ச் செய்தியொன்று கூறுகின்றது.

***

சமீபத்தில் கல்கத்தாவில் கூடிய கிலாபத்து மஹாநாட்டில் இப்பொழுது இந்தியாவில் நடந்துவரும் சத்தியாக்கிரஹ இயக்கம் முகமதியர்களின் ஆதரவு பெறாத வியக்கமென்றும், அதில் முகமதியர்கள் கலந்துகொள்ளக் கூடாதென்றும், லண்டனில் கூடவிருக்கும் சர்வகட்சி மஹாநாட்டில் மகமதியர்கள் கலந்துகொள்ளவேண்டு மென்றும் தீர்மானம் செய்யப்பட்டது என்று கல்கத்தாச் செய்தி கூறுகின்றது.

***

சென்றவாரம் ஸ்ரீமான் ஜெயகரும், டாக்டர் சாப்ருவும் ஏரவாடா சிறையிலிருக்கும் காந்தியடிகளுடனும் பண்டிதர் மோத்திலால் நேருவுடனும் மும்முறைபேசி ஒரு முடிவுக்கு வந்தனராம். காந்தியடிகள் ராஜப்பிரதிநிதிக்கு ஒரு கடிதம் எழுதிகொடுத்தனர் என்றும் அக்கடிதத்தை டாக்டர் சாப்ரு ராஜப்பிரதிநிதியினிடம் நேரே கொடுப்பர் என்றும் தெரிகின்றது.

***

இரங்கோன்நகரில் பலவருடங்களாகப் புத்தகவியாபாரம் செய்துவருபவர்களான நவீனகதா புத்தகசாலையினர் சமீபத்தில் அவர்கள் பிரசுரித்த பர்மிய பாலபோதினி என்ற புத்தகம் வரப்பெற்றோம். இதனைக்கொண்டு பிறர்துணையின்றிப் பர்மா பாஷையில் ஆரம்பப்பழக்கம் பெறலாம். இரங்கூனில் தொழிலுள்ளோருக்கும், இரங்கோன்போகவிரும்புவோருக்கும் இப்புத்தகம் மிகுந்த பயன் அளிக்கவல்லது. உச்சரிப்பு முதலியவைகள் ஆங்கிலத்தாலும் தமிழாலும் எளிதில் தெரியும்வகை விளக்கப்பட்டிருக்கின்றன. இப்புத்தகத்தின் விலை அணா 4. தபால் ஸ்டாம்பு 5 அணா அனுப்புவோர்க்குப் புத்தகம் அனுப்பப்படும். வேண்டுவோர் இரங்கோன், மண்கோமாரித் தெருவிலிருக்கும் நவீனகதா புத்தகசாலையினருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

***

பெஷாவரில் மீண்டும் கலகநிலை ஏற்பட்டிருப்பதால் இராணுவச்சட்டத்தைப் பிரயோகிக்கும் அதிகாரத்தைப் பெஷாவர் கவர்ன்மெண்டாருக்கு அளிப்பதற்காக ராஜப்பிரதிநிதி பின்வரும் அவசரச்சட்டத்தைப் பிரயோகம் செய்திருக்கின்றார்:—

இப்பொழுது பிரயோகிக்கப்படும் சட்டத்திற்கு 1930-ம் வருஷத்து ராணுவ ஆட்சிக்குரிய அவசரச்சட்டம் என்று பெயர். அது வடமேற்கு எல்லைப்புறமாகாணத்தைச் சேர்ந்த பெஷாவர்ஜில்லாவில் முதன்முதலாவதாக அமுலுக்குவந்தது. எல்லைப்புறமாகாணத்தின் எந்தப் பாகத்திலும் இதை அதிகாரிகள் அமுலுக்குக் கொண்டுவரலாம். அப்திரிதிகள் என்னும் வகுப்பினர் பெஷாவர்ஜில்லாவின் பல விடங்களில் இழைத்துவரும் குழப்பத்தை அடக்கவே இச்சட்டம் பிரயோகிக்கப்படுகின்றது. பெஷாவருக்குத் துருப்புகளும் அனுப்பப்பட்டிருக்கின்றன.

Estd. NATIONAL 1906
INSURANCE COMPANY LIMITED.
Head Office:-9, Old Court House St., Calcutta
INDIA'S PROBLEMS CAN ONLY BE SOLVED BY INDIANS
INSURE IN AN INDIAN COMPANY MANAGED BY INDIANS, FOR INDIANS
"NATIONAL" IS THE STRONGEST COMPANY MANAGED PURELY BY INDIANS
"NATIONAL" STANDS FOR INDIAN LIFE ASSURANCE
Low rates of premia. Invested Funds over Rs. 1,47,000,00
Prompt settlement of Claims. Claims paid exceed Rs. 67,000,00
IT WILL PAY YOU TO ENQUIRE ABOUT AGENCY TERMS Please apply tothe Company to-day.
R. G. DAS & Co, OR K. S. GOPALAYYA
Managers. *Branch Secretary, Loane Square, Broadway, Madras.*

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் சத் வைத்தியசாலை,
நஞ்சன்கூடு பல்பொடி நஞ்சன்கூடு.
சோல் ஏஜண்ட்ஸ்:- யுனைடெட் கன்ஸர்ன். பந்தர் தெரு. மதருஸ்
18911

குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோசனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்

டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
ஜீவஸுதா (Reg.)
பாதாமி ரசாயனம்
பிருங்காமலக தைலம்

டிப்போ., பம்பாய் கல்கத்தா
NANJANGUD TOOTH POWDER
பிரான்சு: மதுரை காஞ்சீபுரம்.
ஜெனரல் ஏஜெண்ட்:-யுனைட்டட் கன்ஸர்ன் 54 பந்தர்தெரு, சென்னை.

KALANILAYAM.
REG. NO. M, 2324.

பாரதி

தேசீய மாதத் தமிழ்ப் பத்திரிகை

ஆசிரியர்:—R. நாராயணசுவாமி

இப்பத்திரிகை திங்கள்தோறும் 80 பக்கங்களுடன் வெளிவருகின்றது. அரசியல் விடுதலையும், சமுக முன்னேற்றமும், இந்திய வியாபாரக் கைத்தொழில் முன்னேற்றமும் இப்பத்திரிகையின் நோக்கமாகும். நல்ல காகிதத்தில் அச்சியற்றப் பெற்றுளது. ஆண் பெண் இருபாலாரும் அறியும் வண்ணம் எளியநடையில் பல அறிஞர்களால் எழுதப்பெற்ற வியாசங்களைக் கொண்டுளது. இப்பொழுது இரண்டாவதாண்டு ஆரம்பித்திருக்கின்றது. இந்தியதேயத்தின் நன்மையிலும் விடுதலையிலும் எவ்வகைத் துறையின் முன்னேற்றத்திலும் ஆர்வம் பிறக்கவும்,பிறந்ததை வளர்க்கின்ற ஊக்கம்பெருக்கவும் இப்பத்திரிகை அரியதோர் மருந்தாகும்.

உள்நாடு சந்தா	ரூபா		2 0 0
வெளிநாடு	,,	,,	2 8 0
தனிப்பிரதி விலை	அணா		0 4 0

விலாசம் :— 'பாரதி' கார்யாலயம்,

உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

அமிர்த குண போதினி

5-ம் ஆண்டு பிறந்துள இது போன்ற நவீன தமிழ் மாதச் சஞ்சிகை இதுவரை வெளிவந்ததில்லை விஷயம் யாவும் புதியதாகவும்,அற்புதமாகவும் இருக்கும்.ஜாதிமத வித்தியாசமின்றிச் சகலரையும் களிக்கச் செய்யும். மாதிரி காபி பார்த்தாலே சந்தா சேர்வீர்கள். 64 பக்கங் கொண்டது. வருடசந்தா ரூ. 1 வெளிநாடு ரூ. 1-4-0 மாதிரி காபி இனாம்.

ஆங்கில ஆசான்

10-ம் பதிப்பு வெளிவந்துவிட்டது!!

60-நாளில் இங்கிலீஷ் கற்க அப்பியாசபாடங்களுடன் முன் பதிப்புகளை விட அதிகப் பக்கங்களுடன் வெளிவந்துளது. இதுவரை 53100 புத்தகங்கள் செலவா யிருக்கின்றன. வேறு எதாலும் இவ்வளவு சீக்கிரத்தில் கற்க முடியாது. முன்பதிப்புகளை வைத்திருப்பவர்கூட 10-ம்பதிப்பைப் பார்த்தால் கட்டாயம் வாங்குவார். இதில் 1-அணா முதல் 3000-ரூபா வரையில் சம்பளம் வாடகை கணக்கும் சேர்த்துளது. 800-பக்கம். அழகிய சீமைகாலிகோ பைண்டு. விலை ரூ. 2.

எமது லேடி டிரேட்மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.

தி. இராஜகோபால் முதலியார்,
802, தங்கசாலை வீதி, மதராஸ்.

காந்திக்கு ஜேய்!

கதர் சில்க் அங்க வஸ்திரம்.

சுத்த கதர் சில்க். கையினால் செய்த பட்டு. 5 மு. பட்டு 1-க்கு ரூ. 3-8-0 மூன்றுங்கள். 500 பட்டுகளே வந்திருப்பதால் உடனே ஆர்டர் செய்யுங்கள்.

ஸெண்ட்ரல் ஸ்டோர்ஸ்
373 எஸ்பிளநேடு, சேன்னை.

கம்ப ராமாயணம்.

(மூலமும் உரையும்)

வை. மு. சடகோப ராமானுஜாசாரியார்,
சே. கிருஷ்ணமாசாரியார்,
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார் – பதிப்பு.

பாடபேதங்கள் குறிப்பிக்கப் பெற்றுப் பிழையற்ற மூலமும், தெளிவான பதவுரையும், சொல், அணி, யாப்பு முதலிய இலக்கணக் குறிப்புகளும், விசேட விளக்கங்களும் அடங்கி யிருக்கின்றன. உயர்ந்த காகிதம், நல்ல அச்சு, அழகிய கட்டடம்.

பால காண்டம்	...	ரூ.	5.
அயோத்தியா காண்டம்		ரூ.	5.
ஆரண்ய காண்டம்	...	ரூ.	4.
கிஷ்கிந்தா காண்டம்	...	ரூ.	4-8.
சுந்தர காண்டம்	...	ரூ.	5.

(வி பி. செலவு வேறு)

மானேஜர்:—கலா நிலயம்,
11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

நளாயனி வெண்பா.

திருப்பத்தூர் வர்த்தகரும் முனிசிபல் சேர்மனுமாய
கா. அ. சண்முக முதலியார் அவர்கள் இயற்றியது.

கற்பின்வைப்பெனும் நற்புகழ்வாய்ந்த நளாயினியின் திவ்விய சரித்திரத்தை நேரிசை வெண்பாக்களால் பாடப்பெற்றுள நூல். ஒவ்வொரு செய்யுட்கும் குறிப்புரை முதலியன அவ்வப் பக்கங்களிலேயே அடங்கியிருக்கின்றன. ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், பிரம்மஸ்ரீ ரா. இராகவையங்கார், பிரம்மஸ்ரீ மு. இராகவையங்கார். போன்ற பெரியோர்பலரால் நன்கு பாராட்டப்பெற்றது. அழகிய காகிதத்தில்உயர்தரக் கட்டிடத்தில் அமைந்தது. விலை. ரூ. 1-0-0. (வி. பி. செலவு வேறு).

மானேஜர் :—"கலா நிலயம்",
11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)